# செந்தணல்

செந்தணல்
SENTHANAL

தணல் 1 கனல் 2 2003 ஜீலை 26

விலை 12/=

மருத்துவர்களுக்குச் சவால்
விதியா? மதியா?

சிவாஜி கணேசனுக்கு இந்திய அரசு இழைத்த கொடுமை

வவுனியா ஆதார வைத்தியசாலையில் இரண்டு தலைகளுடன் பிறந்த சிசு

நல்ல விலையிலே.........
சிறுகதை












செம்மையைச் செப்பிடும் செந்தணல்

" செந்தணல்"

சூரியன் வெளியீட்டகம்
61, கற்குழி,
வவுனியா.

தொலைபேசி : 024 - 23891
தொலை நகல் : 024 - 23891

## பாரம்பரியம் பேணப்படுகிறது

படைப்பு ஒன்று பல அறிஞர்கள் கூடியுள்ள சபை ஒன்றிலே முன்வைக்கப்பட்டு பகுத்து ஆராயப்பட்டு அங்கீகாரம் பெறுவது பழந்தமிழ்ப் பாரம்பரியம் ஆகும். பல உள்ளங்களைப் பண்படுத்த வேண்டிய படைப்பு ஒன்றிலே "பழுதுகள்" இருக்கக் கூடாது என்பதே இப்பாரம்பரியத்தின் பிரதான நோக்கமாயிருந்தது. அங்கீகாரம் பெறுவதற்கான இப்பாரம்பரியம் இன்றும் தொடர்கின்றது. பாரம்பரியத்தின் வடிவங்கள் மாறியிருக்கலாம். நோக்கங்கள் மாறவில்லை. அங்கீகாரம் பெறவேண்டும் என்னும் நோக்கத்தின் வெளிப்பாடே இப்பத்திரிகையின் அறிமுகவிழா.

இந்நாட்டின் பத்திரிகையுலக முன்னோடிகள், படைப்புலக மேதைகள் ஒன்று திரட்டப்பட்டு அவர்களிடம் இப்பத்திரிகையின் முதல் வெளியீடு சமர்ப்பிக்கப்பட்டது. "எல்லா வாசகர்களது கண்களையும், உள்ளங்களையும் கவரும் வகையிலும், உள்ளத்தைப் பண்படுத்தும் வகையிலும், நீதி, நேர்மை, அஞ்சாமை எனும் தாரக மந்திரத்துடன் வெற்றிகரமான காலடி எடுத்து வைத்துள்ளது இப்பத்திரிகை" என்னும் அங்கீகாரம் அறிமுக விழாவில் இப்பத்திரிகைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் வாசக உள்ளங்களது வரவேற்பும், வாழ்த்துரையும் இப்பத்திரிகைக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாகும். அளிக்கப்பட்டுள்ள அங்கீகாரத்துடன் பத்திரிகை தர்மத்தைப் பேணுவதும் ஒரு பத்திரிகையின் கட்டாயமான கடமையாகும். குறிப்பாக வாசக உள்ளங்களின் சோர்வு நிலையைப்போக்கித் தன்னம்பிக்கையை வளர்க்கும் பாரிய பொறுப்பு பத்திரிகைக்கு உண்டு. அத்தகைய பாரிய பொறுப்பினை "செந்தணல்" பத்திரிகையும் நிறைவேற்றும். மேலும் படைப்பாளிகளின் களமாகவும் இப்பத்திரிகை திகழும். "படைப்பாக்கங்களில் செந்தணலின் பங்கு" என்று பேசப்படுவதை இப்பத்திரிகை எதிர்பார்த்துக் காத்திருக்கும்.

அன்புடன்
ஆசிரியர்

## அன்பே சிவம்




மனிதனுக்கு இருக்கும் பெரும் பண்பு அன்பு செலுத்துவது. அன்பினால் அடைய முடியாதது எதுவும் இல்லை. மனதிற்கு இதத்தையும் வாழ்விற்கு உரத்தையும் தருவது. இதனால் வாழ்க்கையின் ஆதாரமாக அன்பு விளங்குகிறது. உயிரின் உயிர்ப்பிற்கு மூலமாக விளங்குகிறது. அன்பின் வழியது உயிர்நிலை என்றார் வள்ளுவர். இதனால் உயிர்களிடத்து அன்பு வேண்டுமென்று பாரதி நெறிப்படுத்தினார். உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதன் மூலம் இறையன்பு பெருகுகிறது. பேரின்ப வாழ்வு பெற வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் தான் அன்பு நெறியை சிவநெறி என்றனர். சிவன் என்றால் அன்பு என்றார்கள். எவனொருவன் அன்புடையவனாக இருக்கிறானோ அவன் சிவனை உடையவனாக இருக்கிறான். சிவ சம்பந்தம் என்பது அன்பின் சம்பந்தமே. அன்பு உள்ள உள்ளத்திலே இறைவன் குடியிருக்கிறான். காதலாகிக் கசிந்து உருகும் உள்ளம் இறைவன் வாழும் ஆலயம். அன்பின் பெருக்கினால் அடியடைந்தவர்கள் நாயன்மார்கள். ஒவ்வொரு உயிரிலும் இறைவனைக் கண்டு அன்பு கொண்டு நேசித்த பெரியோர்கள் இறைவனை அன்பின் வடிவமாகப் பார்த்தார்கள். அன்பையும் சிவனையும் பிரிக்காது அன்பே சிவமாகக் கண்டார்கள். அன்பையும் சிவத்தையும் ஒன்றாகக் கண்டமையினால் அன்பும் சிவமும் இரண்டு என்பது அறிவற்றவர் கூற்று என்றும் அன்பே சிவமாவதுதான் மெய்யான கூற்று என்றும் கூறினர். அன்பையே சிவமாகக் கண்டு எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவோமாக.

சைவப்புலவர் : செ. குணபாலசிங்கம்

## வாழ்வில் சிறப்புப் பெற்றோம்!

மத் : 5:3 - 10

ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது. துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். கனிவுடையோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர். நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர். இரக்கமுடையோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர். அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர். நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.

மனோ

## உண்மை

உலகிலே சமயங்கள் தோற்றுவிக்கப் பட்டதெல்லாம் மக்களை நல்வழிப்படுத்து வதற்காகவே. அதற்காக மனிதப்பண்புகளை சீரான நடத்தைகளை அவைகள் எடுத்தியம்புகின்றன. இவைகளை ஏற்று நடப்பதில் பிரதான பண்பு வகிப்பது உண்மைதான். உள்ளம் சீரிருந்தினால் சகலதும் சீரிருந்தும். உள்ளம் சீர்கெட்டு விட்டால் எல்லாமே சீர்குலைந்து விடும். உள்ளம் சீர்பெற நல்லவைகளை வாசித்தல் நல்லவிடயங்களைக் கேட்டல் நற்கருமங்களில் ஈடுபடல் என்பவைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

S. அப்துல்சமட்

## வாழ்த்துப்பா !

காலத்தின் மாற்றம் எல்லாம்
கருத்தினில் கொண்டு இங்கே
ஞாலத்தின் புத்தம் புதிய
சீலத்தை சிறப்பை ஒரு
பாலத்தை போல நின்று
புகுத்திடும் செய்தி எல்லாம்
ஆல்வித்துப் போல இங்கே
ஆற்றிடல் வேண்டும் அன்றோ

செங்கதிர் போல வண்ணம்
சந்தனம் போல கந்தம்
எங்கணும் புகழும் ஓங்க
ஓங்கிடும் பெருமை தாங்கி
சங்கிடும் ஒலியை போல
சகத்தினில் விரவி நின்று
பொங்கிடும் பெரும் சேர
பெருவிலா ஆசி உண்டு.

தக்கவர் பலரும் வந்து
தந்திடும் ஆசி எல்லாம்
மிக்கவே பெருமை சேர்க்கும்
மிகுந்திடும் மேன்மை இங்கே
தொக்கியே நிற்கும் கருத்தை
தோற்றவே கூறி இங்கே
மக்களின் மனதில் ஊறி
மகிழ்ச்சியைத் தரவே வேண்டும்.

பக்கமாய் சாராதங்கே
பக்குவச் சொல்லும் ஆற்றி
தெக்கணம் வடக்கு என்று
தேய்மதி கொள்ளாதென்று
தக்கதோர் கருத்தைச் சொல்லி
தகுதியைப் பெறுதல் வேண்டும்
விக்கினம் இல்லை என்றால்
விளைவது நன்மையாகும்

கற்பனை அல்ல இங்கே
கருத்தினைச் சொல்ல வந்தேன்
விற்பனை ஆக வேண்டில்
விபரங்கள் நிறைய வேண்டும்
கற்றவர் தம்மை நாடி
கருத்ததைத் தேட வேண்டும்
சொற்களில் சோதி உண்டு
சோர்வின்றி அறிய வேண்டும்

மாத்திரை தானும் அங்கே
மயக்கமாய் கருத்திருந்தால்
மாத்திரையாகிச் செய்தி
மறுத்திடும் உண்மைதன்னை
மாத்திரை போலக்கிளர்ந்து
மக்களே ஏழவும் கூடும்
மாத்திரம் கொண்டோர் தாமும்
மயங்கிடும் வேளை உண்டு

மக்களின் மனதை கௌவும்
மந்திரக் கயிறு ஆகி
மிக்கவே சேதி சேர்த்து
மிளிர்ந்திடும் மதியே போல
சிக்கென ஒளியைப்பாய்ச்சி
சிறக்கவே விழிக்க வைத்து
திக்கெலாம் அடைந்து நீயே
திருவுடன் நீடு வாழி

அந்தணர் வளர்த்த தீ தான்
செந்தணல் ஆவதுண்டு
மந்திரப் புன்னகையுள்
செந்தணல் மணமும் உண்டு
அந்தமில் கூத்தன் அண்ணல்
செந்தணல் வண்ணம் தானாம்
இத்திறத்தன்மை தோன்றும்
செந்தணல் நீடு வாழி.

சிவநெறிப் புரவலர்
சி. ஏ.இராமஸ்வாமி

## புவியில் என்றும் பொலிவு கொண்டு வாழ்கவே!

வாழ்க வாழ்க வாழ்கவே - செந்தணல்
வாழ்க வாழ்க வாழ்கவே!

அறிவு சார்ந்த நெறிகள் பேணி
அன்புமனித நேயம் காத்து
உறவினோடு உலகை நோக்கி
உயர்ந்த ஞானம் ஓங்கும் வண்ணம்
வாழ்க வாழ்க வாழ்கவே!

நடுவு நின்று செய்தி தந்தும்
ஞாலம் போற்றும் வளர்ச்சி கண்டும்
நெடிதுயர்ந்த புகழினோடும்
நெறியினோடும் இளமையோடும்
வாழ்க வாழ்க வாழ்கவே!

தூயதான தமிழின் தொண்டும்
துலங்குகின்ற சமூகத்தொண்டும்
நீயுலாவும் இடங்கள் தோறும்
நிகழும் வண்ணம் ஊக்கம் தந்து
வாழ்க வாழ்க வாழ்கவே

உலகுமேவும் வளர்ச்சி யாவும்
உணரும் வண்ணம் நமக்கு நல்கிப்
புவியில் என்றும் பொலிவு கொண்டு
வாழ்க வாழ்க வாழ்கவே!

சிந்தனைக்கு விருந்து நல்கிச்
சிரிக்க நல்ல நகையும் நல்கி
வந்தனைக்கே உரிமையாக்கி
வாழ வேண்டும் கலைகள் நல்கி
வாழ்க வாழ்க வாழ்கவே

புலவர் ம. பார்வதிநாத சிவம்


## பிரதேச வலம்

## வவுனியாவில் உள்ளூராட்சி வாரம்




உள்ளூராட்சி வாரத்தை யொட்டி வவுனியா நகரசபையின் அனுசரணையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் அரங்கக் குழுவினால் சூழல் பாதுகாப்புத் தொடர்பான தெருக்கூத்து வவுனியா நகரில் 14-07-2003............20-07-2003 வரை இடம் பெற்றது இன் நிகழ்வில் அதிகரித்து வரும் பொலத்தீன் பாவனையால் ஏற்படும் பாதிப்பு, கழிவுப் பொருட்களை அகற்றுவதில் மக்களிடம் காணப்படும் அசமந்த ·போக்கையும் சித்தரிக்கும் வகையில் இவ் தெருக்கூத்து நடை பெற்றுவந்தது. முக்கியமாக தெருக்களிலும் நீரேந்து பகுதிகளிலும் குப்பை கொட்டுபவர்களுக்கும் இது ஒரு விளிப்புணர்வு நிகழ்ச்சியாக அமைந்திருக்கும்.

## புனித உத்தரிய மாதாவின் பெருவிழா



வளம் நிறைந்த இளமருதங்குளம் கிராம புனித உத்தரிய மாதா ஆலயத்தின் 89வது வருடாந்த திருவிழா ஆறு ஆண்டுகளின் பின் கடந்த 13ம் திகதி ஆரம்பமானது. மன்னார் மறைவட்ட, ஓமந்மைப் பங்கைச்சேர்ந்த இவ்வாலயத்தின் திருவிழா மீண்டும் சிறப்பாக நடைபெற்றதால் இப்பகுதி மக்கள் அணைவரும் மகிழ்ச்சியுடன் ஒன்று கூடியிருந்தமையைக் காணமுடிந்தது. இவ்வாலய புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறன. இதனை UNHCR நிதியில் கிராம அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

## வவுனியாவில் புகையிரத கண்காட்சி



பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில் நுட்பவியல் அமைச்சினால் முதன்முறையாக வவுனியாவில் புகையிரதக் கண்காட்சி ஒன்று இடம் பெற்று வருகிறது. இக்கண்காட்சி 09-07-2003-..29-07-2003 வரையான காலப்பகுதிக்கு நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சி தொடர்பாக செயற்றிட்ட முகாமையாளர் கருத்து தெரிவிக்கையில் நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் தொடர்பான விடயங்களை மாணவர்கள் மற்றும், சாதாரண மக்கள் உட்பட அனைவரும் அறிந்திருக்க வேண்டும் எனத் தெறிவித்தார்.

## நகரசபையினரால் நடமாடும் வியாபாரிகள் விரட்டியடிப்பு

கடந்த 8ம், 9ம் திகதிக்ளில் வவுனியா பஸ்நிலையத்தில் நடைபாதை மற்றும் நடமாடும் வியாபாரங்களில் ஈடுபட்டிருந்த பழவியாபாரிகளின் பழங்களை நகரசபை உத்தியோகத்தர்கள் பொலிசாரின் உதவியுடன் பறிமுதல் செய்து நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர். இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட வியாபாரிகள் தெரிவிப்பதாவது, நாம் நலன்புரிநிலையங்களில் அடிமட்ட வறுமையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் எமக்குச் செய்ய வசதியாக உள்ள இத்தொழிலைச் செய்து வருகிறோம். இதற்கு எங்களிற்குத் தடைவிதித்தால் எங்கள் சீவியம் பெரிதும் பாதிக்கப்படும், இதற்கு முன் ஒரு தடவை நகர சபையினர் எமக்கு இது சம்பந்தமாக அறிவித்தல் தந்தபோது நாம் அவர்களிடம் கடைகளைக் கட்டித்தந்து வாடகை வசூலிக்குமாறு கோரினோம். அதற்கு இணங்கிய அதிகாரிகள் இப்பொழுது அதைப் பற்றிப் பேசுகிறார்கள் இல்லை என்றனர்.

## ஆறு ஆண்டுகளின் பின் மீண்டும் உரிய இடத்தில் வ/ஓமந்தை மத்தியகல்லூரி



'ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் வவுனியா மாவட்டத்தில் முதற்தரப் பாடசாலைகளுள் ஒன்றாகத்திகழ்ந்து கல்விப்பணியாற்றியது போன்று, எதிர்காலத்திலும் இப்பாடசாலையின் பணி தொடரவேண்டும்"

போர்நடவடிக்கைகளால் சீர்குலைந்து 13-05-1997 தொடக்கம் குஞ்சுக்குளம் கிராமத்தில் இயங்கி வந்த

வ/ஓமத்தை மத்தியகல்லூரி மீண்டும் முன்னர் இயங்கிவந்த இடத்தில் தனது கல்விப் பணியை ஆரம்பிக்கும் விழாவில் கலந்து கருத்துரை வழங்கிய தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு.எஸ்.ஞானம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

16.07.2003 அன்று நடைபெற்ற இவ்வைபவத்தில் வவுனியா மாவட்ட அரச அதிபர் திரு. கே.கணேஸ், பாரளுமன்ற உறுப்பினர்கள் (வன்னி) திரு.இராசா குகனேஸ்வரன், திரு. சிவசக்தி ஆனந்தன், வவுனியா பிரதேச செயலாளர் திரு.சத்தியசீலன், வவுனியா வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி. வீ.ஆர்.ஏ.ஒஸ்வோல்ட், தமிழீழ விடுதலைப்புலிகள் வவுனியா துணை அரசியற் துறைப் பொறுப்பாளர் செங்கதிர் ஓமந்தைப் பிரதேச இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலை அதிபர் திரு. அரசரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உரையாற்றிய வவுனியா-வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.வீ.ஆர்.ஏ. ஒஸ்வோல்ட் "வவுனியா வடக்கு கல்விவலயத்தில் 59 ஆவது பாடசாலையாக இப்பாடசாலை மீளஆரம்பிப்பதாகவும் , முதற்கட்டமாக ஆரம்பப்பிரிவு மட்டுமே இயங்கவிருப்பதாகவும்" குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட துணை அரசியற் துறைப் பொறுப்பாளர் செங்கதிர் தமதுரையில் "ஆறு சுற்றுப் பேச்சுக்களில் இயல்பு வாழ்க்கை பற்றிப் பேசியும், இயல்பு வாழ்வு என்பது சிக்கல் வாய்ந்த ஒன்றாக உள்ளது" எனத் தெரிவித்தார்.

வவுனியா அரச அதிபர் திரு. கே. கணேஸ் தமதுரையில் "13.05.1997இல் இப்பாடசாலை இடம்பெயர்ந்து குஞ்சுக்குளம் கிராமத்தில் இயங்கி, மீண்டும் ஓமந்தையில் இயங்க ஆரம்பித்துள்ளமை இப்பிரதேசத்துக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அடிப்படை வசதிகளற்ற நிலையில் ஆரம்பமாகியுள்ள இப்பாடசாலையின் வெற்றிகரமான பணி மக்களது கைகளிலேயே உள்ளது. நிதி ஒரு பிரச்சினையாக இல்லை பாடசாலையை அண்டிய நான்கு கிராமங்களில் மீள்குடியேற்றங்கள் நடைபெறவுள்ளன" எனக் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவசக்தி. ஆனந்தன் "முன்பிருந்த கல்வித்தரத்தை விடச் சிறந்ததொரு கல்வித் தரத்தை இப்பாடசாலை கொண்டிருப்பதற்குப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் சகல உதவிகளையும் வழங்குவேன்" எனக் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராசா - குகனேஸ்வரன் தனதுரையில்" 1975களில் பிரசித்தி பெற்ற இப்பாடசாலை எதிர்காலத்திலும் பிரசித்தி பெற்றுத் திகழவேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

# வைபவமொன்றில் கலந்து கொள்ள வந்த அமைச்சர் ஜயலத் பல்கலை மாணவர்களால் திருப்பி அனுப்பப்பட்டார்

## – யாழ் பல்கலைக்கழகத்தில் சம்பவம்

யாழ் நிருபர்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஜரோப்பிய புனர்நிர்மாண அமைப்பின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட பாடசாலைகளை வைப ரீதியாகக் கையளிக்கும் விழாவிற் கலந்து கொள்வதற்காக 22 ஜூலை செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்த அமைச்சர் கலாநிதி ஜெயலத் ஜெயவர்த்தனா அவர்கள் பல்கலைக்கழக மாணவர்களினால் கட்டாயப்படுத்தித் திருப்பி அனுப்பப்பட்டார். இதனால் அங்கு நடைபெறவிருந்த நிகழ்வு இடமாற்றஞ் செய்யப்பட்டு G.T.Z அலுவலகத்தில் நடைபெற்றது.

சம்பவம் நிகழ்ந்த அன்று காலை 9.40 மணியளவில் புனர்வாழ்வு மீள் குடியேற்றம் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சர் கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன அவர்கள் ஜரோப்பிய புனர்நிர்மாண அமைப்பின் நிதி உதவியுடன் G.T.Z நிறுவனத்தினால் புனரமைக்கப்பெற்ற 56 பாடசாலைகளைக் கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொள்ளவதற்காக வருகை தந்த போது யாழ்ப்பாண பல்கலைக்கழக வாயிலில் நூற்றுக்கணக்கான மாணவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டு வற்புறத்தித் திருப்பியனுப்பப்பட்டார்.

> **“ஊரா வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே”**
> **ஐரோப்பிய புனர்நிர்மாண நிதியில் புனரமைக்கப்பட்ட பாடசாலைகளைக் கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொள்ள வந்த அமைச்சர் டாக்டர் ஜெயலத்திற்கு ஏற்பட்ட அநுபவம்.**

போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு ஒன்றரை வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் யாழ் குடாநாட்டின் பெரும்பகுதி இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டிருப்பதும். உயர்பாதுகாப்பு வலயம் என்ற வகையில் அப்பிரதேசங்களில் உள்ள மக்கள் மீளக் குடியேற இயலாத நிலையில் இருப்பதுவும் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகள் அழிக்கப்பட்டும் ஆக்கிரமிப்பிற்கு உட்படுத்தப்பட்டும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்க வசதியற்றும் இருக்கின்ற நிலையில் வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்குகின்ற நிதிகளில் நம்நாட்டு அரசியல் வாதிகள் அரசியல் வளர்ப்பதனை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என மாணவர் தரப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவலநிலையினை மாற்றியமைத்து அனைத்து மாணவர்களும் சுதந்திரமாகத் தமது சொந்த இடங்களில் வாழ்ந்து அங்கு கல்வி கற்கவும் ஏற்ற சூழ் நிலையை உருவாக்கும் வரையும் எந்த அமைச்சர்களையும் எந்த நிகழ்வுகளிலும் கலந்து கொள்ள பல்கலைக் கழக வளாகத்தினுள் அனுமதியோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். ஊரானின் அனுதாப உணர்வைத் தமது அரசியல் இலாபத்திற்குப் பயன்படுத்தும் அரசியல்வாதிகளின் தந்திரம் இங்கு பலிக்கவில்லை மாணவர்கள் விழிப்பாகவே இருக்கிறார்கள் என மக்கள் பேசிக் கொண்டார்கள்.

# ஒரு கோடி ரூபா நட்டஈடு உள்துறை அமைச்சருக்கு எதிராக மனு

(நீதிமன்ற நிருபர்)

ஒரு கோடி ரூபா நட்ட ஈடு கோரி உள்நாட்டமைச்சருக்கெதிராக 69வயதுப் பெண்மணியொருவர் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

பொரல்லையைச் சேர்ந்த சித்திராங்கி பொன்சேகா என்பவரே இந்த மனுவைத் தாக்கல் செய்தவராவார்.

உல்லாசப் பிராயணிகள் சபையின் அங்கீகாரத்துடன் தாம் பொரல்லையில் நடத்தி வந்த விருந்தினர் விடுதியில் அத்து மீறிப் பிரவேசித்துத் தேடுதல் நடத்திய பொரல்லை பொலிசார் சந்தேகத்திற்கிடமான எதுவித பொருட்களையும் கைப்பற்றவில்லையெனவும் மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 11, 12(1) 14(1) பிரிவுகளின் படி அடிப்படை மனித உரிமையை மீறும் செயல் இது எனவும் மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தான் ஒரு விதவை என்பதைப் பொருட்படுத்தாமல் தனியாக ஒரு பெண்மணியிடம் அத்துமீறிப் பிரவேசிக்கிறோம் என்பதை நினைத்துப் பார்க்காமல் பொரல்லை பொலிசார் விருந்தினர் விடுதிக்குள் நுழைந்து தேடுதல் நடத்தினர் என்றும் இச்செயல் சட்டத்திற்கு முரணானது எனவும் மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, 1வது எதிர்மனுதாரராக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளார். மற்றும் பொலிஸ்மா அதிபர், பிரதிப் பொலிஸ் மா அதிபர், பொரல்லை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தனக்கு ஒரு கோடி ரூபா நட்டஈடு பெற்றுத் தரும்படியும். விசாரணையைத் தொடர்ந்து நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்க வேண்டுமெனவும் மனுவில் மனுதாரர் கேட்டுள்ளார்.

# விஜயகுமாரணதுங்க கொலை வழக்கில் 1ம் எதிரிக்குப் பிடி ஆணை

நீதிமன்ற நிருபர்

ஜனாதிபதியின் கணவரும் முன்னாள் மஹஜனக் கட்சியின் தலைவருமான விஜயகுமாரணதுங்கவின் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி, மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தாக்கல் செய்த வழக்கு விசாரணை கடந்த திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

மேல்நீதிமன்ற நீதிபதி குமார் ஏகரட்ன முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்ட இவ் வழக்கின் இரண்டாவது எதிரியான துரைசாமி என்பவரே மேற்குறிப்பிட்ட பொருட்களை மறைத்து வைத்திருந்தவராவார்.

இவருக்குப் பிடியாணை பிறப்பித்த நீதிபதி ஏகரட்ன செப்டம்பர் மாதம் 6ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும் படியும் உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் முதலாவது எதிரியான ஏ.எச் தனபாலாவையும் இதே இடத்தில் ஆஜராகும்படி பிடியாணை பிறப்பித்தார்.

விசாரணை எதிர்வரும் 6ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# மீள்குடியேற்ற கிராமங்களில் அடிப்படை வசதிகளின்றி மக்கள் அவலம்

வவுனியா நிருபர்

உள்ளக இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்றப்பட்ட தரணிக்குளம், சுந்தரபுரம், மறவன்குளம் போன்ற பகுதிகளில் மக்கள் குடிநீர் பஸ்போக்குவரத்து வைத்திய சேவை போன்ற அடிப்படை வசதிகளின்றி அல்லல்படுகின்றனர். மாதத்தில் ஓரிருமுறை மாத்திரம் நடமாடும் வைத்திய சேவை நடைபெறுகின்ற போதும் அவசர நோயாளிகளுக்கான போக்குவரத்து அற்ற நிலையிலேயே உள்ளனர். இவை தொடர்பாக உள்ளக இடம் பெயர்ந்தோருக்கான உடனடிச் செயற்றிட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து இம்மக்களின் இவ் வசதிகளை மேம்படுத்தவென மனித உரிமைகள் ஆணைக்குழு முயன்று வருகின்ற போதும் இது தொடர்பாக உடனடி நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க முடியாதிருக்குமென வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

# நாதஸ்வர மேதை, கலாசூரி N.K.பத்மநாதனை இழந்தது பேரிழப்பு



கலாசூரி என்.கே.பி.யின் இழப்பு ஈழத்து இசையுலகில் ஈடுசெய்ய முடியாத இடைவெளியினை உருவாக்கியுள்ளது.

யாழ்க் குடாநாட்டில் பல வகையிலும் புகழ் படைத்த அளவெட்டிப் பகுதியில் வடக்கு அளவெட்டிக் குறிச்சியில் கலாசூரி என்.கே.பத்மநாதன் அவர்கள் 1932ல் பிறந்தார்கள். பிரபலமான தவில் வித்துவானாக விளங்கிய கந்தசாமி தம்பதிகளின் புதல்வனான இவர் இசைத்துறையில் ஆர்வங்கொண்டு தந்தையாருடன் இசைத்துறையில் ஈடுபட்டார். எம்.ரீ.எம் திருநாவுக்கரசுவிடம் இசை பயின்ற இவர் இலங்கையில் நாதஸ்வர இசையில் மிகப் புகழ் வாய்ந்த கலைஞராக விளங்கினார். இசைத்துறையில் மாமன்னராக விளங்கியவர்.

இலங்கைத் திருநாட்டில் மட்டுமல்லாது பிரான்ஸ், ஜேர்மனி இலண்டன் முதலிய ஐரோப்பிய நாடுகளிலும் கனடா, அவுஸ்ரேலியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் பிரபல்யம் பெற்ற கலைஞராக விளங்கினார்.

1980ல் இசைமேதை பாலமுரளி கிருஷ்ணாவினால் பாராட்டப் பெற்ற இவர் யாழ் நல்லூர் முருகன் ஆலயத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக வருடந் தவறாது இசைத் தொண்டாற்றி இறையருளுக்குப் பாத்திரமானவர்.

அகில இலங்கை இசைக் கலைஞர் சங்க நிறுவனராகவும், தலைவராகவும் முப்பது வருடங்களுக்கு மேலாகக் காப்பாளராகவும் விளங்கிய இவர் நாதஸ்வர மேதை, இசைச் சக்கரவர்த்தி எனப் புகழ் பெற்றவர்.

இலங்கை அரசு இவருக்குக் “கலாசூரி” எனும் உயர் விருதினை வழங்கிக் கௌரவித்தது.

ஈழத்தின் புகழை உலக அரங்கில் உயர்த்தி வைத்த கலைமேதை தனது 71வது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்து விட்டார். ஈழத்து இசைத்தாய் கல்யாணியை விட்டு முகாரியை இசைக்க வைத்துவிட்டார். அன்னாரின் தூல சரீரம் அக்கினி சங்கமமானாலும் அவரின் புகழுடம்பு இசையுள்ளவரை நிலவும். நாதஸ்வர ஓசை எங்கு கேட்டாலும் தேவனாகி விட்ட கலாசூரியை நினைவுறுத்தும். அன்னாரின் ஆத்மா சாந்தியுறப் பிரார்த்திக்கின்றோம்.

-ரிஷீகர்

# வவுனியா மாவட்ட தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் 2003

| நிகழ்ச்சி | நிலை | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| பிரிவு 03 | | | |
| இசை தனி | 1 | க.கணேஸ்வரன் | வ/தமிழ் ம.ம.வி |
| | 2 | க.ஜனகராஜ் | வ/கோ. பு.மு.வி |
| நடனம் தனி | 1 | பி.பிறேமசிறீதரன் | வ/தமிழ் ம.ம.வி |
| | 2 | ஞா. கார்த்திகா | வ/குளவி சுட்டான் அ.த.க.பா |
| வயலின் | 1 | வி.பிராசந்தி ரமேஷ் | வ/வைப்பிரகாச ம..வி |
| பிரிவு 04 | | | |
| பேச்சு | 1 | இ.அனுசியா | வ/சைவப்பிரகாச ம.வி |
| | 2 | பூ.நதியா | வ/மதியாமடு வி.வி |
| பாஓதல் | 1 | சே.பிரிந்திகா | வ/இறம்பைக்குளம் ம.வி |
| | 2 | சு.கஜெந்தி | வ/குளவிசுட்டான் அ.த.க.பா |
| இசைதனி | 1 | கை.குலரூபா | வ/சைப்பிரகாச ம.வி |
| | 2 | வ.சுபாஜினி | வ/புதுக்குளம் ம.வி |
| நடனம்தனி | 1 | சி.சுகாநந்தி | வ/இறம்பைக்குளம் ம.வி |
| வீணை | 1 | சிறீதரன் வினோதன் | வ/தமிழ் ம.ம.வி |
| வயலின் | 1 | ச.ஜெனார்த்தினி | வ/இறம்பைக்குளம் ம.வி |
| பிரிவு 05 | | | |
| பேச்சு | 1 | செ.தர்சிகா | வ/இறம்பைக்குளம் ம.வி |
| | 2 | சோ.துஷாந்தன் | வ/கோ.கு.மு.வி |
| பாஓதல் | 1 | மெ.லிசாந்தினி | வ/சைவப்பிரகாச ம.வி |
| | 2. | த.சுதா | வ/சி. பூ. வி |
| இசைதனி | 1 | ப.யசிந்தரன் | வ/விபுலானந்த ம.வி |
| | 2. | ச.அகல்யா | வ/கல்மடு அ.த.க.பா |

13ஆம் பக்கம் பார்க்க...

# அற்புதமான வாழ்க்கையை எதிர்பார்த்த இரட்டையர்க்கு அமைதியான உறக்கம்

பூமித்தாய் கண்ணீர் மழையால் நனைந்து கொண்டிருந்தாள் யூலை 8ம் திகதி மருத்துவ உலகில் சாதனை படைக்கப் போகும் அறுவைச் சிகிச்சை இது என நம்பிக் கொண்டிருக்க, இரட்டையர்களின் மரணப் பயணத்தை மண்ணிற்கும் மக்களுக்கும் அறிவித்தனர் வைத்தியர்கள்.

பிறப்பிலே ஒன்றிணைந்த இவர்கள், மரணத்திலும் இணை பிரியாத இறுதிப் பயணம் உலக மனங்களில் நீங்கள் நினைவுகளாகப் பொறிக்கப்பட்டு விட்டது.

தெற்கு ஈரானின் பிரநோசா பாத் என்ற இடத்தில், வாழ்க்கைத் தரத்தில் வறுமைப்பட்ட. ஒரு குடும்பத்தில் வேடன் பிஜானி



யும் லாலே பிஜானியும் பிறந்தார்கள்.

லாடன்பிஜானி, லாலேபிஜானி என்றாலே போதும் ஈரானியர்களுக்கு கொள்ளைப் பிரியம், அந்த அளவிற்கு இவர்கள் அன்பாலும் பண்பாலும் மற்றவர்களை ஈர்த்திருந்தனர். ஆனால் பிரம்மனின் கைவண் ணத்தை இவர்கள் அறிந்திருக்க நியாயமில்லை.

சிறுவயதிலேயே தங்களை பிரித்துக் கொள்ள முயன்ற இவர்களுக்கு வைத்தியர்கள் சிகிச்சை அளிக்க மறுத்து விட்டனர். எட்டுவயதுப் பருவத்தில் தனித்தனியே செல்ல முயன்று இருவரும் எதிரும் புதிருமாக நடந்து வலிதாங்க முடியாமல் கதறி அழுதார்கள்,

தலைகள் ஒட்டி அற்புதமாகப் பிறந்த இவர்களைப்பற்றி பத்திரிகைகளும் ஏனைய ஊடகங்களும் ஏராளமான செய்திகளை வெளியிட்டனர். தலை நகரான தெவிர்ரானில் வைத்தியர்களின் கண்காணிப்பில் இவர்கள் நலமாக வளர்ந்தனர்.

அறுவைச் சிகிச்சை வெற்றி கரமாக முடிந்து நாங்கள் இருவரும் பிரிந்துவிட்டாலும் ஒன்றாகவே வாழ்வோம் என இவர்கள் அவ்வப்போது கூறுவார்கள் இருவரும் ஒட்டியிருந்தாலும் ஆசைகளும் கனவுகளும் வேறாகவே இருந்தன. லாடன் சட்டத் தரணியாக விரும்பினார். லாலே ஒரு பத்திரிகையாளராக விரும்பி னார். இதற்காக இருவரும் சட்டப் படிப்பை முடித்து பட்டம் பெற்றனர்.

அமைதியானவர் லாலே, வாயாடியாக இருந்தார் லாடன், இவருக்கு சமைப்பதில் அலாதிப் பிரியம். லாலேவிற்கு அமைதியாக இருப்பதுதான் மிகவும் பிடிக்கும் அத்துடன் விலங்குகள் என்றால் அலாதிப் பிரியம். லாடனுக்கு விலங்குகளை கண்டாலே பிடிக்காது. இரு வரும் செய்யும் அட்டகாசங்கள் பார்போரை அடடா என வியக்க வைக்கும்.

அதிகாலை தொடங்கி அந்தி சாய்ந்த பின்னும் இவர்களுடைய அன்புத் தொல்லைகளும் சீண்டல்களும் ஓய் வதே இல்லை.

பரீட்சை எழுதும் போது கூட ஒருவருக்கொருவர் விடை களை இரகசியமாக சொல்லிக் கொள்வார்களாம். இது சட்டக் கல்லூரி தேர்வு காலங்களில் தெரிய வந்தது எனினும் இவர்கள் தமக்குள் சொல்லிக் கொண்டு தேர்வு எழுதுவரை தடுக்க முடியாது என உணர்ந்த அரசு இருவரும் சட்டக்கல்வி படிக்க உதவிக் தொகை வழங்கியது, பத்திரிகையாளராக விரும்பிய லாலே வாடனுக்காக தனது விருப்பத்தை விட்டுக் கொடுத்துச் சட்டம் பயின்றார்.

தங்களை வெவ்வேறாக பிரிக்க 1996ம் ஆண்டு இவர்கள் இருவரும் ஆவலுடன் ஜேர்மனுக்குச் சென்றனர். ஆனால் இவருவரையும் தனித்தனியே பிரிக்க முடியாது என ஜேர்மன் வைத்தியர்கள் கைவிரித்த போது இருவரும் மிகுந்த ஏமாற்றத்துடன் நாடு திரும் பினர்.

தாங்கள் பிரியவே முடியாதா என்று ஏங்கிய இவர்கள் சிங்கப்பூர் வைத்தியர் கீத்கோ, நேபாளத்தில் தலை ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை அறுவைச் சிகிச்சை மூலம் வெற்றி கரமாகப் பிரித் ததை அறிந்தனர். இதனால் சிங்கப்பூர் வைத்தியருடன் தொடர்பு கொண்டனர். அறுவைச் சிகிச்சை செய்து தங்க ளைப் பிரிக்குமாறு இருவரும் மன்றாடிக் கேட்டனர். இரட்டையர்களுக்கு அறு வைச் சிகிச்சை செய்ய டாக்டர் கீத்கோ தலைமையில் 28 டாக்டர்களும் நூறு உதவி யாளர்களும் தயாரானார்கள்.

ஜூலை மாதம் 6ம் திகதி காலை 8.30 மணியளவில் வாடன் வாவேயை பிரிக்கும் கடின சிகிச்சைகள் ஆரம்ப மாகின. உலகமே இந்த சிகிச்சை முடிவுகளைக் காண ஆவலுடன் இருந்தது. முதல் நாள் இருவரது தலைகளும் மொட்டை அடிக்கப்பட்டு ஸ்கான் செய்யப்பட்டன அடுத்து இருவரையும் கதிரை களில் இருத்தி மயக்க மருந்து கொடுத்தனர். இருவருடைய தலைகளையும் வெட்டிப்பிளக்கும் முயற்சியில் டாக்டர்கள் இறங்கினார்கள். மண்டை ஓடு மிகவும் கடினமாகவும் நெருக்கமாகவும் இருந்ததால் முதல் நாள் சிகிச்சைக்கு திட்டமிட் டதை விட அதிக நேரம் எடுத்தது, சிகிச்சை அளித்த மருத்துவக்குழு இரவு பகலாக இவர்களை கண் காணித்து வந்தது.

இரண்டாம் நாள் சிகிச்சையில் இருவரின் மூளைகளும் தனித் தனியாக இருந்தாலும் அவை ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக இருந்தமையால் அவற்றை பிரிக்கும் முயற்சி நடை பெற றது. மூளை களுக்கும் தனித் தனியாக இரத்தத்தை வழங் கும் முயற்சி தீவிரமா னது. டாக்டர்களின் முகத்தில் தெளிவு இருந்தாலும் கண்களில் பயத்தின் அறிகுறிகளே தென்பட்டன.

மூன்றாம் நாள் சிகிச்சை ஆரம்பமாகியது. சிகிச்சை ஆரம்பத்திலேயே டாக்டர் களின் கைகளில் பதற்றம் காணப் பட்டது. "இருவரது இரத்த அழுத்தங்களும் கூடிக் குறைந்தபடி இருந்தன," என்று மருத்துவக்குழுவின் சார்பில் பேசிய டாக்டர் பிரேம்குமார் நாயர் தெரிவித்தார், இதனால் மருத்துவ மனையில் கூடி இருந்தவர்கள் பரபரப் படைந தனர்.

இதன்பின் சரியாக 2.30மணிக்கு (ஜூலை 8ல்) டாக்டர் பிரேம் குமார் நாயர் பத்திரிகையாளர் குழுமியிருந்த இடத்திற்கு வந்தார் அப்போது அங்கு நின்றவர்களின் இதயங்கள் படு வேகமாக துடித்துக் கொண் டன.

எல்லோரும் மிக ஆவலுடன் டாக்டர் என்ன சொல்லப் போகிறாறோ என ஆவலுடன் காத்திருக்க டாக்டர் அந்த சோகச் செய்தியை அறிவித் தார்.

'லாடன் சற்று நேரத்திற்கு முன் மரணமடைந்து விட்டார். இப்படி டாக்டர் கூறியதும் ஓ... என்ற கதறல் வானைப் பிளந்தது, அதிக இரத்தம் வெளியேறியதால் லாடன் மரணமடைய நேரிட்டது எனக் கூறிய டாக்டர் பிரேம்குமார் லாவேயின் நிலையும் மிகவும் மோசமடைந்துள்ளது என்று கூறிய துமே அங்குள்ள அனைவ ருமே நடைப்பிணமாகினர்.

அறுவைச் சிகிச்சை கூடத்தில் டாக்டர்கள் தாங்கள் கண்கள் நீர ததும்பியதையும் பொருட் படுத்தாது லாலேயைக் காப்பாற்றப் போராடினர். இரத்தம் தொடர்ந்து வெளியேறி வருவதால் லாலேயின் மண்டை ஒட்டுத் தசைகளை மூடித்தைத்தனர் ஆனால் 52 மணி நேரங்கள் நடைபெற்ற சிகிச்சை எந்தப் பலனையும் அளிக்கவில்லை லாடன் இறந்த தொண்ணூறு நிமிடங் கள் கழித்து லாலேயும் இறந்து விட்டார் என்று டாக்டர் கீத்கோ அறிவித்தார்.

இந்தச் செய்தியினால் உலகமே ஒருகணம் ஸ்தம்பித்துவிட்டது அனைவரது நெஞ்சங்களும் கனத்தது ஈரானியர்கள் புலம் பினர். லாடன் லாலேயின் நல்ல செய்தி கிடைக்கும் என காத்திருந்த அவர்களுடைய பெற்றோர் பெரும் துயரால் கதறித் துடித்தனர்.

சத்திரச் சிகிச்சை முடிந்ததும் நாம் அற்புதமான ஒரு புதிய வாழ்க்கையை வாழப் போகிறோம் எனக் காத்திருந்த இரட்டையர்களுக்காக நாமும் எமது இதயங்களைத் தளர்த்தி இறை பிரார்த்தனை செய்வோம்.

தொகுப்பு : விஜெய

---

**மருத்துவத்தில் அடுத்த சாதனைக்கான முயற்சி**
**விதிக்கு எதிரான இம் முயற்சியில்**
**விதியா? மதியா?**



ஈரானிய ஒட்டிப் பிறந்த இரட்டையர்களைப் பிரிக்கும் சிகிச்சையில் சிங்கப்பூர் மருத்துவர்கள் வெற்றி காணாத நிலையில் ஒட்டிப் பிறந்த எகிப்திய இரட்டையர்களை வெட்டிப் பிரிப்பதற்கு அமெரிக்க மாநிலமொன்றில் வைத்தியர்கள் முயலவிருக்கிறார்கள்.

எகிப்திய இரட்டையர்களான ஹமட், முகமட் இவர்கள் இரண்டு வயதுப் பராயமுள்ளவர்கள். இவர்கள் தலை ஒட்டியவாறு பிறந்தவர்கள். இவர்கள் கால்கள் ஆறு அடிகள் இடைவெளியில் அமைந்து உள்ளதால் இவர்களால் எழுந்து நிற்க முடியாது. வேறு கோணங்களில் உடல்கள் இருப்பதனால் இவர்களால் நடமாட இயலாது உள்ளனர்.

இவர்களை எப்படியாவது பிரித்து எடுக்க வேண்டும். என்பது அவசியமாகி விட்ட நிலையில் இவர்களுக்கான சத்திர சிகிச்சையினை அமெரிக்காவில் நடாத்தவுள்ளனர். ஈரானிய இரட்டையர்களின் சிகிச்சை முடிவு அநுபவத்தைத் தந்தாலும், இம் முயற்சி மருத்துவத்துறையில் மாபெருஞ்சவாலே.

இச் சிறுவர்கள் வயதில் குறைந்தவர்களாக இருப்பதனால் இவர்களைப் பிரித்தெடுப்பது வெற்றியைத் தரும் என மருத்தவர்கள் நம்பிக்கை தெரிவிக்கிறார்கள்.

இம் முயற்சி வெற்றி பெற்று அந்த இரண்டு சிறுவர்களும் நீடுவாழ வேண்டும் என உலகம் பிரார்த்திக்கிறது.

தலை ஒட்டிப் பிறந்தவர்கள் அதிசயம் ஆனாலும் இரண்டு தலையுடனும் ஒரு உடலுடனும் ஒரு குழந்தை இந்தப் பிறப்பு அதிசயம் வவுனியர் ஆதார வைத்தியசாலையில் அண்மையில் நிகழ்ந்தது. குழந்தை இறந்துவிட்டது. அதன் படத்தையே இங்கே காண்கிறீர்கள்.

# பாராளுமன்றத்தின் பகைப்போறிக்குள்ளிருந்து போராடும் வலியோரின் பிடிக்குள்... ...


தமிழ் மக்களின் பிரதம பங்களிப்பு பெறப்படாமல் தமிழ் மக்கள் சுதந்திர இலங்கையில் சுமார் 50 வருடங்களாகவேனும் ஆளப்பட்டு வந்தது நாட்டின் வெட்கக் கேடான வரலாறு. இது ஒரு பிரதான குறைபாடு ஆகும். இதுவே இன்று இலங்கையை உச்சியில் பிடித்து உலுப்பும் முக்கிய பிரச்சினையாகி விட்டிருக்கும் அளவுக்கு பாரதூரமானதுமாகும். இதன் பின்னணியில் பார்த்தால் இரு தசாப்தகால ஆயுதப்போரும் ஒன்றரை வருடகால போர்தவிர்ப்பும் தற்செயலாகத் தொடங்கி நடைபெற்று வரும் சம்பவங்கள் அல்ல என்பது புலனாகும்.

வோஷிங்டனில் நடத்தப்பட்ட முன்னோடி மகா நாடும் பின்னர் நடைபெற்ற டோக்கியோ மகா நாடும் மேற்கூறிய பாரம்பரியம் ஒன்றின் தொடர்ச்சியாகவே நடந்தேறியுள்ளன என்று கருதவும் முடியும். ஆனால் சில வித்தியாசங்களும் உள்ளன.

சுதந்திர இலங்கையின் தமிழ் மக்கள் தமது இனம் சார்பான பிரதான கோரிக்கைகளை முன்வைத்து வாதிடத் தொடங்கிய ஐம்பதுகளின் முற்பகுதியில் அதன் தலைமையில் எஸ்.ஜே.வீ செல்வநாயகம் இருந்தார். அதற்கு முன்னரும் இனத்தின் சார்பிலான கருத்துகள் வெளியிடப்பட்டு இருந்தனவாயினும் வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒரு தாயக பூமியாக கருதிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு அரசியல் கட்டமைப்புக்குள் இணைந்து இனத்தின் சார்பில் ஒரு தலைமையாக தமிழ்மக்கள் கிளம்பிய காலத்திலிருந்தே தமிழர்களின் பிரதம பங்களிப்பு பெறப்படாமல் இலங்கையின் நிர்வாகம் முன்னெடுக்கப்படும் வரலாறு ஆரம்பித்தது.
இது பெரும்பாலும் ஐம்பதுகளின் நடுப்பகுதியிலாகும்.

1956ல் முதன்முதலாக தமிழர் இல்லாத அமைச்சரவை அமைக்கப்பட்டது. அதற்கு முன் அமைச்சர்களாக தமிழர்கள் பணியாற்றியுள்ளனர். ஆனால் பாரம்பரிய பிரதேசம் இனம் என்பவற்றின் சார்பில் கொள்கைகளை முன்வைத்தும் நிபந்தனைகளின் பேரில் இணைந்தும் அத்தகையவர்கள் அமைச்சர்களாக இருக்கவில்லை. பெரும்பாலும் தென்னிலங்கை ஆட்சியாளருடன் ஏற்படுத்தியிருந்த நல்லெண்ண உறவுகள் தனிப்பட்ட ஆளுமைகள் போன்றவற்றின் அடிப்படையில் அமைச்சர்களாக பதவி வகித்தனர். இனத்தினதும் பிரதேசத்தினதும் சார்பில் கோரிக்கைகளை நிபந்தனைகளாக வைத்திருக்கவில்லை.

தமிழ் மக்களின் பிரதான அமைப்பு ஒன்று கணிசமான எண்ணிக்கையினரை பாராளுமன்றத்தில் கொண்டு செயற்பட ஆரம்பித்த 1956 வரையான காலப்பகுதியிலிருந்தே பிரதம பகுதியினரின் பங்களிப்பு பெறப்படாமல் நாட்டின் சட்டங்களை நிறைவேற்றுவதும் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை அமுல் செய்வதுமான விஷமத்தனமான சம்பிரதாயம் ஆரம்பித்திருந்தது.



அக்காலப் பகுதியிலிருந்து பிரதான அரசியற் கோரிக்கைகளை தமிழரசுக்கட்சியும், தொடர்ந்து தமிழர் கூட்டணியும் ,இன்று தமிழ்க் கூட்டமைப்பும் தொடர்ந்து முன்வைத்து வருகின்றன. இக்கட்சிகள் முன்வைத்த நிபந்தனைகள் எக்கால கட்டத்திலும் ஆட்சியிலிருந்த சிங்களக் கட்சிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்கு பிரதான காரணமாக இருந்தது அவர்களிடமிருந்த 10,12 எம்பிக்களின் வாக்குகள் ஆளும் தமிழ் கட்சிகளிற்கு தேவைப் பட்டிராமல் செல்லாக் காசுகளாக இருந்ததேயாகும்.

தமிழர் சார்பில் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்ட காரணத்தினாலேயே அந்நிபந்தனைகளை முன்வைத்த பிரதான தலைமை அரசாளும் வட்டத்திற்குள் உள்வாங்கப்படவில்லை. 1965 ஆம் ஆண்டின் ஐ.தே.க - தமிழரசு அரசியல் கூட்டு இதற்கு ஒரு சிறு விதிவிலக்காக இருந்தது. ஆயினும் அதுவும் கூட தமிழர் தலைமையை நாட்டின் தீர்மானங்கள் எடுப்பதில் பங்காளிகளாக்கக் கூடாது என்ற வரலாற்றுப் பாடத்தை சிங்களத் தலைமைகளுக்கு கற்பித்தபடியே

**ஆரணி**

அரைகுறையாக நின்றிருந்தது.

இனத்தின் சார்பில் நிபந்தனைகளை முன்வைக்காத தமிழ் அமைச்சர்கள் ஒவ்வொரு அமைச்சரவையிலும் இருந்தனராயினும் அவர்களால் இனஞ்சார்ந்த அல்லது தமிழர் பிரதேசம் சார்ந்த அபிவிருத்திகளை செய்யமுடியாத போய்விட்டது. முரணாக அவர்கள் தமிழர்களின் பிரதான கோரிக்கைகளை முறியடிப்பதற்கான கருவிகளாகவும் ஆட்சியாளர்களால் பயன்படுத்தப்பட்டனர். இதனால் துரோகிகள் எனப்பட்டம் சூட்டப்பட்டு அரசியலிலிருந்து ஓரங்கட்டப்பட்டனர்.

சுதந்திர இலங்கையின் பாராளுமன்றம் இதற்கு பெருமளவில் அனுசரனையாக இருந்தது. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியத் தமிழர்கள் வாக்குரிமை பெற்று மலையகத்திலிருந்தும் சில தமிழ் உறுப்பினர்கள் பாராளுமன்றம் வந்த போதிலும் சிங்கள இனத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையே முக்காற் பகுதியாக்கிக் கொண்டிருந்த பாராளுமன்றம் நிபந்தனை விதிக்கும் தமிழர் பிரதிநிதிகளுடன் பேரம் பேசுவதை தவிர்த்து விட தாராளமாகவே இடம்கொடுத்தது. இதனால் உதிரிக்கட்சிகள் சுயேட்சை எம்பிக்கள், நியமன
எம்பிக்களாகவிருந்த தமிழர்களின் ஆதரவையும் அரசாங்கங்கள் இலகுவாக பெற முடிந்தது. அவ்வாறே தென்னிலங்கையை தளமாகக் கொண்ட சிறிய கட்சிகள் மற்றும் இடதுசாரிக் கட்சிகளை ஆட்சேர்த்துக் கொண்டு ஆட்சியைத் தொடர்ந்தன பெரிய கட்சிகள்.

மிகப் பெரும்பான்மையினராக சிங்களவரைக் கொண்ட பாராளுமன்றத்தில் 12 சதவீதமேயான தமிழர்களை பழரதிநிதித்துவம் செய்யும் பிரதான தமிழ்க் கட்சிகளால் எதிர்நீச்சலடிக்க முடியவில்லை. பாராளுமன்றமோ நிரந்தரமாக 75 வீத சிங்களவர்களின் பிரதிநிதிகளை கொண்டிருந்தது. தமிழர்கள் 12வீத சனத்தொகையையே கொண்டிருந்தனர். அதற்கும் சிறிது குறைவான பிரதிநிதிகளையே நிரந்தரமாக கொண்டிருந்த பாராளுமன்றம் தமிழர்களுக்கு ஒரு சிக்கல் பொறியாக இருந்தது. ஒரு தனியான இனம் தனது தேவைகளைப் பெறுவதற்கு 75வீத சிங்கள எம்பிக்களை கொண்ட பாராளுமன்றத்தில் காலம் கனியும் வரை காத்திருற்தது! அதன் வசமிருந்த எம்பிக்களின் எண்ணிக்கையைக் காட்டியே இனத்தின் உரிமைகளை பெறக்காத்திருந்தது என்றுமே நிறைவேற முடியாத நாய் வாலை நிமிர்த்தும் பிரயத்தனத்தில் காலம் கனிந்தது. இன்றும் தனது பிரதான கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகிறது.

இந்த மிகவும் வாய்ப்பான சூழலை நன்கு பயன்படுத்திக் கொண்ட இலங்கையின் ஆளும் இனக்கட்சிகள் தமிழர்கள் கடந்த 50வருடகாலமாக முன்வைத்து வந்த நிபந்தனைகளை மிகவும் இலகுவாக தட்டிக்களித்து வந்தன. தமிழர்கள் பாராளுமன்றப் பொறிக்குள்ளிருந்து தம்மை வெளியே இழுத்தெடுப்பதில் படிப்படியாக வெற்றி கண்டனர்.

> முன்னர் பாராளு மன்றத்தின் பகைமைப் பெரும் பான்மைக்குள் சிக்கிய நீதி இனிமேல் சர்வதேச நாடுகளின் சதி வலைக்குள் சிக்கி விடுமா
>
> ?

பாராளுமன்றப் பெரும் பான்மையை காண்பித்து தமது கோரிக்கைகள் புறக் கணிக்கப்பட்டு வந்த நீண்ட வரலாற்றினை மாற்றினர். இதனால் 1983 இன் பிற்காலத்தில் இந்தியாவின் அனுசரணை கிடைத்தது. நிபந்தனைகள் சிலவற்றை பாராளுமன்றத்திற்கு வெளியே வைத்து தீர்க்கும் முயற்சிகள் ஓரளவு வெற்றியளித்தன.

இலங்கை இந்திய உடன்பாட்டின் வழியே அதிகாரப் பரவலாக்கம் ஏற்பட்டது. ஆனால் அரசியல் நலன்கள் மற்றும் புவிசார் அரசியல் இராணுவ நிலைப்பாடுகள் குறுக்கிட்டன. இதனால் மீண்டும் தமிழர்களின் பிரதான தலைமையும் அவர்களுடன் சேர்த்து இனத்தின் சார்பிலான பிரதான நிபந்தனைகளும் புறந்தள்ளப்பட்டன. நிபந்தனையின்றி ஆதரவு தரும் தமிழர்களை வழக்கம் போல தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தேடிக் கொண்டு மீண்டும் பாராளு மன்றத்திற்குள்ளும் அரசியலமைப் பிற்குள்ளும் தமிழர் கோரிக்கைகளை கட்டிப்போட முனைந்தனர். இப்போதும் முயன்று வருகின்றனர்.

தமிழர்கள் தமது நிபந்தனைகளை சர்வதேச மயப்படுத்தினர். பரந்து விரிந்த அந்தத் தளம் உதவும் என்று நம்புகின்றனர். கிணறு வெட்டும் போது அபூர்வமாக சில சந்தர்பங்களில் பூதம் கிளம்பி விடுவதாக புராணக் கதைகள் உள்ளன. சமாதானத்திற்கு உதவ வந்திருப்பதாக கூறம் சர்வதெச உயர் அதிகாரிகள் வெளியிடும் கருத்துக்கள் அப்பாவித்தனமானவையாக உள்ளன. ஏனைய அமைப்புக்களுடன் செயற் படுவது போல புலிகளுடனும் செயற்படும் நாளை அமெரிக்கா எதிர்பார்க்கிறது. என்றும் ஜனநாயகத்தை ஏற்று ஏனைய தமிழ் கட்சிகளையும் பேச்சுக்களில் உள்ளடக்க வேண்டும் என்றும் தெரிவிக்கும் கருத்துக்கள் கருத்தியலானவை நடைமுறைக்கு உதவுவன அல்ல.
தென்னிலங்கையின் அரசியல் தலைமைகள் உதிரிக் கட்சிகளையும் பேச்சுக்களினுள் இழுக்கும் முயற்சியில் சக்தியை செலவிட்டு வருகின்றன. ஜனநாயக நடைமுறைகள் பற்றி பெரிதாக போதிக்கின்றன. தமிழ் மக்களின் பிரதான கோரிக்கைகளை புறந்தள்ளுவதற்கு வரலாற்று ரீதியாக சிங்கள அரசுகளுக்கு உதவியவை உதிரியான தமிழ் கட்சிகளே என்பதால் அவற்றை உள்வாங்கி விட்டால் பிரச்சினையில் பெரும்பகுதி தீர்ந்த விடும் என்று சக்திகள் நம்புகின்றன.

இதன் மறுபக்கமே உதிரிக் கட்சிகளுக்கும், பேரினவாதக் கட்சிகளில் ஒட்டியிருக்கும் தமிழ் உறுப்பினர்களுக்கும் எதிராக தமிழ் மக்களின் பிரதான கோரிக்கைகள் இது வரை நிறைவேற்றப்படமால் இழுத்தடிக்கப்படுவதற்கு இவைகளே காரணம் என்பது வரலாறு.

புவிசார் அரசியலே முக்கிய தீர்மானங்களை எடுக்கிறது. என்பதால் முன்னர் பாராளுமன்றத்தின் பகைமைப் பெரும்பான்மைக்குள் சிக்கிய நீதி இனிமேல் சர்வதேச நாடுகளின் சதி வலைக்குள் சிக்கி விடுமா என்று இன்று தமிழர்கள் மத்தியில் அச்சம் தலை தூக்குகின்றது.

## சிறுகதை

# நல்ல விலையில்

ஈழவாணி

> "மாமி உங்கட மகனை நல்ல விலைக்கு விக்கக் காலம் இருக்கேக்க ஏன் நழுவ விடுறீங்க"

மரத்தில் மகிழ்ந்துலாவி மாம் பிஞ்சுகளைக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்த சில மந்திகள் அவளைப் பார்த்து அலமந்து குதித்தோடின. மாமரக் கூரையின் கீழ் வடலி ஓலையால் சுற்றி அடைக்கப் பட்ட கிணறு அது. குழலி ஆடைக ளைக் களைந்து விட்டு மார்பிற்குக் குறுக்காகத் தான் கொண்டு வந்த சாரத்தைக் கட்டினாள். கட்டியவள் மீண்டும் ஒருமுறை இறுக்கமாக உள்ளதா எனச் சரிபார்த்துக் கொண் டாள். உடுப்பு அலம்பும் வாளியை இழுத்து அருகில் வைத்து விட்டு மளமளவென நீரை இழுத்து வாளியி னுள் ஊற்றினாள் "சடக் சடக்" என யாரோ நடந்து வரும் ஓசையும் தொடர்ந்து திரும்பிச் செல்லும் ஓசையும் கேட்டது.

"பத்மினி பத்மினி" என அழுத்தமான அழைப்பு, வந்தவன் பத்மினியின் கணவர் தான் என்பதைக் குழலி புரிந்து கொண்டாள். "பத்மினி" மீண்டும் குரலை உயர்த்தி உறுக்கி அழைத்தான்.

அவள் "ஓம் வாறன் என்னப்பா அதுக்கிடையில் வந்திட்டி யளே ஏன் துவாய மறந்திட்டீங்களே" என வினவியபடி வெளிவாயிலுக்கு வந்து சேர்ந்தாள்.

"ஒரு மண்ணும் இல்ல, ஆர் கிணத் தடியில் நிக்கிறது. மனுசர் களைச்சு விழுந்து வந்து களைப்புத் தீர மேல் கழுவலாம் எண்டு போனா அங்கே யும் ..." என்று குறைபட்டுக் கொண் டான்.

"இவள் தானப்பா குழலி, குளிக்க இஞ்ச தானே இப்ப வாறவள், கொஞ்சம் பொறுங்கோ கெதியாக் குளிச்சிட்டு விடச் சொல்லிப் போட்டு வாறன்" என நழுவினாள்,

"இஞ்ச நில்லும் உது இங்க எத்தின நாளா நடக்குது, இஞ்ச பாரும் எந்தக் குழலியா இருந்தா எனக்கென்ன உவள் இஞ்ச குளிக்க வர என்னை யும் ஒரு மாதிரிப் பார்ப்பினம், இனிமேல் இந்த நாட்டியம் எல்லாம் இஞ்ச வேண்டாம் எங்கேயும் இளிச்சவாயள் இருப்பினம் அங்க போய் நடத்தச் சொல்லு" என வறுத்துக் கொட்டினான்.

"ஸ்...சத்தமா கதைக்காதேங்கோ அவளுக்குக் கேக்கப்போகுது மெல் லப் பேசுங்களன்"

"ஏன்? கேட்டா என்ன உவ பெரிய கண்ணகி எரிச்சுப்போடுவா எண்டு பயமாகக் கிடக்குதே உனக்கு ம்ம்கே......" என நக்கலாய்ச் சிரித்தபடி உள்ளே சென்றுவிட்டான்.


குழலியின் சப்த நாடிகள் அனைத் தும் ஒருமுறை ஸ்தம்பித்து விட்டன. மார்பிற்குக் குறுக்காகக் கைகளைக் கட்டிக் கொண்டு அப்படியே மரம் போல் நிற்கின்றாள், அவள் கண் முன்னால் அழகிய கலர்கலரான சீன்கள் ஓடின.

பூங்குழலியும் அருண்மொழியும் பாக்கியம் புனிதவதி தம்பதியினரின் செல்வக் குழந்தைகள். குழலிக்கு இரண்டு வருடங்கள் மூத்தவன் அருண்மொழி. ஊரில் மிகவும் வசதி யாக வாழ்ந்தவர்கள், தோட்டமும் தோப்புமாய் எப்பொழுதும் பொலி ந்து கொண்டிருக்கும் செல்வத்துடன் அவர்களுக்குப் பசுமாடுகளுடன் நித்தமும் பாலும் நெய்யும் என செழிப்பாக இருந்தார்கள். குருக்கள் புதுக்குளத்திலும் அதன் அண்டை ஊர் மனைகளிலும் "பாக்கியத்தை" தெரியாதவர்கள் கிடையாது. அப்படிப் பட்ட கொடைத் தனவான் குழலியின் தந்தை. குழலியின் வீட்டுத்தோட்டக் காணியில் வசித்தவர்களே, பத்மினி குடும்பம் (பத்மினியின் பெற்றோர் குழலி வீட்டுத்தோட்டத்தில் சேவகம் செய்பவர்கள், அவர்களுக்குச் சொந்தமாகக் காணி கிடையாது) மிகவும் வறியவர்கள் இவர்களைப் பார்த்துப் பரிதாபப்பட்டே தன் தோட்டத்தில் ஓர் துண்டை அவர்க ளுக்கு இருக்கக் கொடுத்தது வயிற றுப் பசியைப் போக்க வழியும் செய்து கொடுத்தார் பாக்கியம். அவர்களும் அதற்கு விசுவாசமாய் உழைத்தனர்.

குழலிக்கு தான் வசதியானவள் என்ற பெருமையோ செருக்கோ சிறிதும் கிடையாது, பாடசாலை செல்லும் போது கூட நடந்து செல்லும் பத்மினி யைத் தன்னுடன் அழைத்துக் கொண்டே செல்வாள். வேற்றுமை இல்லாது தன்னுடன் சேர்த்து பத்மினி அவளுக்கும் உணவு கொடுப்பாள். தான் வீட்டில் விளையாடும் வேளை களில் அவளையும் அழைத்துச் சேர்த்து விளையாடி பெரிதாகக் கட்டியுள்ள தொட்டியுள் குழலியும் பத்மினியும் குளித்து விளையாடிய அந்த நாட்களில்... ...

மாமரத்தில் இருந்து தொப்பென்று குழலியின் தலையின் மேல் மாங்காய் விழுந்தது. நன்றாக நோ எடுத்தது குழலிக்கு, மனசு லேசாக வலித்தது அவளுக்கு.

"சீ... இப்படியும் இருப்பரா? மனுசரா? சிறிதாவது எனக்காகப் பேசவில் லையே முன்பு எப்படி என்னுடன் நட்பாய் இருந்தவள் ம்...... போகட்டும் காலங்கள் நிலைப்ப தில்லையே" என எண்ணி யவள் மளமள வெனக் குளித்து விட்டு அணியவென எடுத்து வந்த உடையை அணிந்து கொண்டு கழற்றிய உடைகளை எடுத்து உருண் டையாகக் கட்டிக் கையில் எடுத்து அணைத்தபடி மண்றோட்டில் நடந்து பாவற்குளம் பூமடு வாய்க்காலை நோக்கி நடந்தாள். விதியை நோவதா? தன்னை நோவதா? என அவளுக் குப் புரியவில்லை.



இடப்பெயர்வுகள் அடிக்கடி நடை பெற்றுக் கொண்டிருந்தமையால் குழலியின் குடும்பமும் இடம் பெயர்ந்து மடுவிற்குச் சென்றது. பின் 1993ம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் குருக்கள் புதுக்குளத்திற்கு வந்தார்கள், அக்காலப் பகுதியில் கல்வி நிலைமைகள் சீராக இல்லா மையினால் வவுனியா நகர் நோக்கி 1994ம் ஆண்டு புறப்பட்டனர், மன்னார் வீதி பூவரசங்குளம் வழியாக வந்து சாளம்மைக்குளப் பகுதியில் இருக்கும் விக்ஸ் காட்டுப் பகுதியினூடாகச் சென்று கொந்தக் காரன்குளம், காக்கையன்குளம், வழியில் வெள்ளத்தில் மிதந்து சேற்றில் புரண்டு ஒரு வழியாக ஓமந்தை சென்றடைந்தனர். அன்று ஓமந்தை இறம்பைக்குளத்தில் தங்கி அடுத்தநாள் வவுனியா நகருக்குள் செல்லப் புறப்பட்டனர்.

குழலியின் மனதில் துயரம் வடிந்தது. இனி மீண்டும் ஊருக்கு வந்து எப்போது எல்லோரையும் பார்ப்பது. என்னோடு பிரியாமல் விடைதந்த சந்திரன், தோப்புகள், கிளித்தட்டு விளையாடிய தடங்கள், கடைசியாகச் சந்தித்த நாட்கள் என உள்ளம் வெடித்துச் சிதறி விடும் போல் இருந் தது. இருந்தாலும் தன் படிப்பு முடிந் ததும் ஊருக்கு அப்பா அழைத்து வருவார் என்ற அசையாத நம்பிக்கை யுடன் புறப்பட ஆயத்த மானாள். அவளுக்குத் தெரியாது அவளுடைய விதி வேறு பாதை வகுத்தது.

தாண்டிக்குளம் செக் பொயின்ரை அண்மித்து விட்டார்கள் அவர்கள் வவுனியா நகரை எட்டிப் பார்த்தால் தெரியும் போல் இருந்தது அவர்கட்கு. அப்பொழுது ஏதோ மிருக பாசையில் (அப்பொழுது அவர்களுக்கு அப்ப டிப்பட்டது) கதைப்பது போல் இருந்தது. இருவர் வந்து ஏதோ கேட்டனர். இவர்கள் புரியாமல் நிற்க மரத்தடியில் நின்ற ஒருவரை கையைக் காட்டி அழைத்து ஏதோ சொல்ல அவர் "பெரியவங்க ரொம்பச் சரி" உங்களுக்கு ஒண்ணும் இல்ல, இந்த பொண்ணும் பொடியனும் சந்தேகம் சொல்லுது. அதுசுட்டி விசாரிக்கச் சொல்றது மாத்தையா என மொழிந்து ஒரு கூடாரத்தினுள் அழைத்துச் சென்றார்கள். கூடாரத்துள் சென்றவர்கள் வரவில்லை, பின் வந்தார்கள் மூன்று வருடங்கள் கழித்து. குழலியின் தந்தை மகனையும் மகளையும் நினைத்துப் பாயில் விழுந்தவர், ஒரு வருடத்தின் பின் ஓரேடியாகப் போய்விட்டார். தாய் தான் இழுத்திழுத்துப் பிள்ளைக ளைப் பார்த்து வந்தாள்.

வாய்க்காலில் சலசல என நீர் ஓடிக் கொண்டிருந்தது. படிகளில் இறங்கி னாள் கண்களை மூடி அழுக்குகள் எல்லாம் கரையட்டும் என எண்ணி னாளோ என்னவோ ஒரு மணி நேரமாகக் குளித்தாள்.

கண்ணகை அம்மன் கோயிலில் மதியப் பூசை தொடங்கி விட்டது என்பதைக் காட்ட கோயிலில் மணி "டாண் டாண்" என ஒலித்தது. வாச லில் செருப்பைக் கழற்றிவிட்டுத் திரும்பி உள்ளே நோக்கினாள் மின்ன லென அவன் பார்வை அவளை வெட்டிச் சென்றது. தொடர்ந்து காறி உமிழும் ஓசையும் கேட்டது. ஒரு கணம் நின்று நிதானித்துக் கண்களை இறுக மூடித் திறந்தாள். பின் மளமள வெனக் கோயிலினுள் சென்றாள். அம்மனுக்குத் தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. கண்களை மூடிப் பிரார்த்தித்தாள். கண்கள் இடுக்குகள் வழியாகக் கண்ணீர் பொல பொல என வழிந்தது. விழித்து யாரும் கவனிக்கிறார்களா எனப் பார்த்தாள் நல்ல வேளை யாரும் கவனிக்க வில்லை என அறிந்து நிம்மதி அடைந்தாள்.

பூசை முடிந்து பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு எல்லோரும் சென்று விட்டார்கள். குழலி மட்டும் வெளி மாடத் தூணில் சாய்ந்து கொண்டு அமைதியின்றித் துடித்துக் கொண்டி ருந்தாள்.

"யார் தன்னைப் புரியாவிட்டாலும் தன்னைப் புரிந்து கொண்ட, தன் உயிராகப் பார்த்த அவனே இன்று முகத்தில் சேற்றை அப்பியது போல் நடந்து கொண்டானே" என ஏங்கித் தவித்தது அவள் மனம். சந்திரன் குழலியின் அயல் வீடு. சந்திரனின் பெற்றோரும் குழலியின் பெற்றோரும் உறவினர்கள் இல்லையே தவிர அவர்களிடையே உறவுகட்கும் மேலான பாசப்பிணைப்பு ஒன்று நிலவி இருந்தது. சிறுபராயத்திலேயே "மாமி மாமி" எனத் தன்னைச் சுற்றி வருகின்ற துடிப்பான சிறுமியாக இருந்த குழலி மேல் அளவில்லாத பிரியம் சந்திரனின் தாய்க்கு. சந்திரனும் அவர்கட்கு ஏக புத்திரனே. உணவில் இருந்து உடுக்கும் உடை வரை இரு குடும்பத்தாரும் கலந்தாலோசித்தே எடுத்துக் கொள்வார்கள்.

சிறு பிராயத்தில் இருந்தே சந்திரனும் குழலியும் ஒன்றாக உண்டு பச்சை பசுமை நிறைந்த வயல் வரப்புகளில ஓடிப்பிடித்தாடி ஒளித்துப் பிடித்து விளையாடி என ஒற்றுமையாக இருந்தனர். அருண்மொழியும் சந்திர னும் ஒரே ஆண்டு ஆனபடியால் இருவரும் ஒன்றாக இருந்து படிக்கும் போது குழலியும் சேர்ந்து கொள்வாள்.

காலங்கள் மாற்றமடைய குழலியும் பெரியவளானாள், ஆனால் அவர் களுடைய அன்பு மட்டும் மாறாமல் ஆழமாக வளர்ந்தது. குழலி பெரியவ ளானதும் சிறிது கட்டுப்பாடுகளைப் போட்டார்கள். பெற்றோர் முன்பு போல் அவளுக்குச் சந்திரனுடன் சண்டை இடவோ, பறித்து ஏமாற்றி உண்ணவோ, அவனுடன் கிளித்தட்டு மறிக்கவோ முடியவில்லை. அவர் களிடையில் சந்திப்புக்கள் குறைய ஏக்கம் அதிகமாகிக் கொண்டிருந்தது. இருவருக்கும் ஒரே துடிப்பு, எப் போது பார்ப்போம் பேசுவோம் என. களவாகவாவது பார்த்துப் பேசிட வேண்டும் என மனம் ஏங்கிடும். ஒரு நாள் கூட குழலி வெளியூருக்கு உறவினர் வீட்டிற்கு என எங்காவது சென்றால் துடியாய்த் துடித்து விடு வான் சந்திரன், குழலிக்கும் கூட அப்படித்தான், வீடு வந்து சேரும் வரை ஒரே டல்லாக இருப்பாள், பெற்றோர் அதுபற்றிக் கேட்டால் தலையிடி வயிறு நன்றாயில்லை என ஏதாவது கூறி வைப்பாள்.

இப்படியே இருவருக்குமிடையில் காதல் வேரூன்றியதை இருவரும் புரிந்து கொண்டு "அன்றில் பறவை களாயினர்" இந்த விடயம் ஊர் கண்ணில் பட்டு விட்டது. "ஊர் வாய்க்கு மூடிகிடையாதே" இரு வீட்டாருக்கும் தெரிய வந்தது, சந்திரனின் தாய்க்கு குழலி மருமகளா வதில் சர்க்கரையாய் இனித்தது. ஆனால் குழலி வீட்டில் பெரிய பூகம்பமே வெடித்து விட்டது. தந்தை குதித்தார் என் செல்ல மகளை எப்படி வாழவைப்பேன் தோப்பும் துரவுமாக வாழ்ந்த செல்ல மகள் கஷ்டப்படுவதா அவளுக்கு எப்படிப் பட்ட மாப்பிள்ளை பார்ப்பேன், நகரத்தில் நாகரீகமான, உத்தியோகம் பார்க்கும் மாப்பிள்ளையைத் தான் கட்டி வைப்பேன் என்ரமகள் மகாராணியப் போல வாழாமல் எதிர் வீட்டில் சேவகம் செய்வதா? என "தாம் தீம்" எனக் குதித்தார்.

குழலியின் தாய் குழந்தையின் மனம் நோகக் கூடாது எனத்தவித்தாள். ஏற்கெனவே இரண்டு நாட்களாக உணவும் இல்லை. பேச்சும் இல்லை. இந்நிலை நீடிப்பதை அவள் விரும்ப வில்லை கணவனுடன் நாசூக்காகப் பேசினாள். சந்திரனின் நற்குணத்தை யும் அவன்குடும்பத்தார் பற்றியும் விளக்கினாள். சந்திரன் கெட்டிக் காரன். அவன் படித்து முன்னுக்கு வந்து உத்தியோகம் பார்ப்பான். அதோட அவனுக்குப் பிச்சல் பிடுங்கலும் இல்லத்தானே. அவனும் ஒரு பிள்ளை தானே, என எடுத் துக் கூறி கணவனை ஒரு மாதிரிச் சம்ம திக்க வைத்தாள்.

தகப்பானர் ஒரு மாதிரி இசைந்தாலும் கடுமையான கண்டிசன் ஒன்றைப் போட்டு விட்டார். படித்து முடியும் மட்டும் காதல் கீதல் எண்டு திரியிற தில்லை ஒரே இடத்தில் இருந்து இருவரும் படித்தால் இருவரும் உருப்பட்டாற் போலதான். அத்தோட இங்க மாஸ்ரர் மாரும் இல்லாததால படிப்பும் அவ்வளவாக இல்லை எனக் கூறி குழலியையும் அவளு டைய தமையனாரையும் அழைத்துக் கொண்டு குடும்ப சகிதமாக நகர் நோக்கிப் புறப்பட்டார் குடும்ப சகிதமாக பாக்கியம், குழலி கடைச யாகச் சந்திரனிடம் அவன் தன்னைப் பிரியாமல் விடை கொடுத்தது கண்க ளில் இன்னும் நிழலாடின.

கைகளை இறுகப்பற்றி கமுகம் தோப்பினுள் கண்கலங்கி நின்ற காட்சி அவள் நினைவில் மீளும் போதெல் லாம் அவளுள் மின்சாரப் பாய்ச்சல் கிளர்ச்சியை ஏற்படுத்தும் "குழலி நீ டவுணுக்கு போனா என்ன மறந்திரு வியா? குழலி, நீ தான் என்னோட அன்பைப் புரிஞ்சு கொள்ளாட்டியும் உன்னோட என்ர இதயவறையில் உறவாடி உயிருள்ள வரைக்கும் வாழுவேன். வாழ்ந்து கொண்டிருப் பன். ஆனா நீயும் என்ன மறக்க மாட்டாய் எண்டு உன்ர ஆழமான அன்பில் புரிஞ்சு கொண்டன், இருந்தும் உன்னோட அப்பா எங்க ளப் பிரிச்சுப் போடுவாரோ எண்டு தான் பயமாக் கிடக்கு" எனக்கூறும் போதே அவன் கண்கள் சிவந்து பிரசவிக்க இருந்த கண்ணீரை ஒருவாறு அடக்கிக் கொண்டு விடை பெற்றான்.

சிட்டுக்குருவி விர் என வந்து, அர்ச்சனைத் தேங்காயுள் இருந்த வாழைப் பழத்தைத் தன் குன்றிமணிக் கண்களால் உருட்டி உருட்டிப் பார்த்து விட்டுச் சின்ன உதட்டினால் கொத்திப் பார்த்தது, குழலிக்கு அப்போதுதான் சுய உணர்வு வந்தது, குருவியைத் துரத்தி விட்டு கன்னத்தில் இரண்டு முறை போட்டுக் கொண்டாள், மீண்டும் அம்மன் சன்னிதானத்தை வணங்கினாள். "கடவுளே நீ எனக்கு எவ்வளவு சோதனையளத் தந்தாய். எல்லாத்தயும் தாங்கினன். என்ன நேசிக்கிற என்னப் புரிஞ்சுகொண்ட ஒரு சீவன் எனக்காகக் காத்திருக்கிறது எண்டு தான் இருந்தன் இனியும் நான்... நான் பெரும் விம்மலுடன் அழுகை முட்டி வெடித்தது. மனதி லுள்ள மயக்கங்கள் விலகிவிடுவது போன்று கண்ணீர் பெருக்கெடுத்து வெளியேறியது.

அவள் தீர்க்கமான முடிவுடன் வெளியே காலெடுத்து, வைத்தாள். ஏன் நான் சாகவேணும். இறைவன் என்னை ஏதோ காரணத்திற்காகத்தான் உருவாக்கியிருக்கிறான். அவன் படைச்ச உயிரை நாசமாக்கக் கூடாது, ஏன் நான் மற்றவைக்காகவும் வாழக் கூடாது. "அன்னை திரேசா போல இல்லாட்டியும் என்னால் முடிஞ்ச சின்னச்சின்ன உதவிகளைச் செய்து ம்.... அப்படியும் வாழலாம் தானே"

மளமளவென படிகளில் இறங்கி வந்து செருப்பை மாட்டிக்கொண்டு திரும்பியவள் சந்திரனின் தாய் வருவதைக் கண்டாள் அவர் முக மெல்லாம் கறுத்துப் போனது. முகத்தை திருப்பி சங்கடப்பட்டுக் கொண்டு நின்றார். இந் நிலையை நீடித்து அவரை மேலும் சங்கடப் படுத்தாமல் விறு விறு என நடந்து அவரைத் தாண்டி வந்தாள். "மாமி உங்கட மகனை நல்ல விலைக்கு விக்கக் காலம் இருக்கேக்க ஏன் நழுவ விடுறீங்க" எனத் தனக்குள் சிரித்துக் கொண்டாள் குழலி.

# தித்திக்கும் திரை



## மகிழ்ச்சிக் கடலில் ரிதனா

ரிதனா வடக்கு வாசல் படத்தின் கதாநாயகி. அப்படத்தின் தயாரிப்பாளரான விஜய முரளி அந்தப் படத்தில் நடிப்பதற்கும் தெரிந்தவர்களையே போட்டு இருப்பதாகவும் அப்படித் தெரிந்தவர்களாக இருப்பதால் எல்லா வகையிலும் ஒத்துழைப்பார்கள் என்றும் கூறினார். நடிகை ரிதனா மிகவும் ஒத்துழைப்பு வழங்குகின்றார் என்று ஸ்ரார் ஹோட்டல் நிகழ்ச்சி ஒன்றில் அவர் குறிப்பிட்டதால் ரிதனா மகிழ்ச்சிக் கடலில் திளைக்கிறார்.




## கன்னடப் படவுலகை உதறும் குட்டி ராதிகா

கன்னடத்திலிருந்து தமிழ் படவுலகிற்கு நடிக்க வந்த குட்டி ராதிகா தற்போது கன்னடப் படத்தின் தயாரிப்பாளர்களையும் டைரக்டர்களையும் மதிப்பதில்லை. தமிழில் ஷாம் உடன் "இயற்கை" படத்தில் இணைந்து நடித்த இவர் தமிழ் திரை உலகில் நிலைத்து நிற்கலாம் என்ற நம்பிக்கையே இதற்குக் காரணமாகும் என கன்னடத் திரை உலகம் கூறுகின்றது.

## துன்பச் சேற்றில் மலர்ந்த சிரிப்புத் தாமரை

### வீழ்ந்ததே சூரியன்

1928 ஜனவரி 6 இல் சர்க்கஸ் திரைப்படம் வெளியிடப்பட்டு உலகமெங்கும் சிறப்பான வெற்றி பெற்றது. 1927 - 28 ஆண்டுக்கான சிறப்பு விருதினையும் அந்தப் படம் பெற்றது. சர்க்கஸ் படம் திரையிடப்பட்ட சமயம் சாப்ளினின் அன்னை ஹன்னா உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பதாக சாப்ளினிக்கு தகவல் வந்தது. உடனே புறப்பட்டுச் சென்றார் . மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வந்தார். சாப்ளின் அவர் பக்கமாக சென்று அம்மா சாப்ளின் வந்திருக்கிறேன் என்று தழுதழுத்த குரலில் தாயைக் கூப்பிட்டபடி அவர் கையைப் பற்றினார். உனக்கொன்றும் ஆகிவிடாது, குணமாகி வீட்டுக்கு வந்து விடுவாய் என்று அம்மாவுக்கு ஆறுதல் கூறினார்.. கண்களை விழித்துப்




பார்த்து விட்டு மீண்டும் நினைவிழந்தார். ஹன்னா. தன் மகனைக் கடைசியாகப் பாத்ததும் அந்தத் தாய் அப்போது தான். மறு நாள் ஸ்ரூடியோவில் படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்த போது அன்னையார் இறந்து விட்டதாக அவருக்கு தகவல் கிடைத்ததும் மருத்துவ மனைக்கு விரைந்தார். அப்போது சிட்னி ஐரோப்பாவில் உடல் நலமின்றி இருந்ததால் சவ அடக்கத்திற்கு வந்து கலந்து கொள்ள அவரால் முடியவில்லை. ஆனால் சவ இறுதி ஊர்வலத்தில் லட்சக்கணக்கான ரசிகர்களும், பொதுமக்களும் கொட்டும் பனியில் நடந்தே வந்தார்கள் . இந்த ஜன நெரிசல் மத்தியில் யாரும் எதிர்பாராத வண்ணம் ஓர் அதிசயம் நடந்தது. கலங்கிய முகத்துடன் சாப்ளினின் இரண்டாவது மனைவி ஹன்னா தன் இரண்டு மகன்களையும் ஊர்வலத்தில் நடத்தியே அழைத்து வந்திருந்தார்.



### மூன்றாவது திருமணம்.


தன் நண்பர்களில் ஒருவரான ஜோசெளக் தம்முடைய படகு வீட்டில் உல்லாசப் பயணம் செய்ய வருமாறு சாப்பிளினை அழைத்தார் வீட்டில் பலர் இருந்தனர். அவர்களுள் கண்களையும், கவனத்தையும் கவர்ந்தவள் ஒரு பெண் அவள் பெயர் பாலெட் கொடார்ட் . அவளுடன் தனிமையில் பேசினார். அப்போது மாடர்ன் டைம்ஸ் என்ற படத்தில் பாலெட் கொடார்டை நடிக்க வைத்தார். சாப்ளின் நாளடைவில் அவரை தன்னுடைய மூன்றாவது மனைவியாக்கிக் கொண்டார். மார்டன் டைம்ஸ் படமும் உலகமெங்கும் சக்கை போடு போட்டது. இதற்கிடையே சாப்ளினுக்கும் அவருடைய மூன்றாவது மனைவி பாலெட் கோடார்டுக்குமிடையே மனத் தாங்கல் லேசாகத் துளிர் விடத் தொடங்கியது. ஒரு நாள் சாப்ளின் ஸ்ரூடியோவில் தம் மேக்கப் அறையில் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்தார். அப்போது அவர் மனைவி பாலெட் யாரோ ஒரு புதிய நபருடன் அங்கு வந்தாள். சாப்ளின் அப்போது திரைக்கதை தொடர்பாக தீவிர சிந்தனையிலிருந்ததால் அவர்கள் வருகையைக் கவனிக்கவில்லை. இவர் என்னுடைய ஏஜெண்ட் என்று பாலெட் அந்த இளைஞனை அறிமுகப்படுத்தி வைத்தாள். அந்த இளைஞன் பேசினான் மிஸ்டர் சாப்ளின் மாடர்ன் டைம்ஸ் படத்திலிருந்து நீங்கள் பாலெட் கோடார்டுக்கு வாரம் இரண்டாயிரத்து ஐநூறு டொலர்கள் ஊதியம் தந்து கொண்டிருக்கீறிர்கள். ஆனால் போஸ்டர் விளம்பரங்களில் பாலெட் கோடாட்டுக்கு எழுபதைந்து சதவீதம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதை வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன் என்றான். அவன் மேலும் பேசுவதற்குள் சாப்ளின் குறுக்கிட்டு, அது எனக்குத் தெரியும் இருவரும் வெளியே போங்கள் என்றார் வேகமாக.

**Fire** என்ற திரைப்படத்தின் மூலம் பிரபல்யமானவரும், பிரச்சினையை உருவாக்கியவருமான "அழகி" நந்திதாதாஸ் நடிக்கும் தமிழ்ப்



படமொன்று விரைவில் வெளி வர இருக்கிறது. இது இவரது இரண்டாவது தமிழ்ப் படம். இப்படத்தில் நந்திதா மம்முட்டியுடன் இணைகிறார்.

# நினைவகலா நிஜம் சிவாஜி கணேசன்



1928 ஒக்டோபர் 01 ம் திகதி சீர்காழியிலே பிறந்து, நடிப்பு உலகில் தனக்கு நிகரில்லாத ஓர் அற்புத கலைஞனை உலகமிழந்து இரண்டு வருடங்கள் ஆகி விட்டன. 2001 ம் ஆண்டு ஜுலை 21 ம் திகதி இவ்வுலகை நீத்து வானுலக வாசியாகிவிட்ட நடிப்புலக மாமேதை பத்மஸ்ரீ செவாலியே சிவாஜி கணேசனை நாம் இழந்து அவர் பதித்த தடங்களை நினைவாகக் காணுகின்ற ஒரு நிலையில் இருக்கிறோம். 1952 ம் ஆண்டில் நாடக உலகில் நடிகனாக விளங்கிய வி .சி கணேசன் திரை உலகில் பராசக்தி படத்தின் மூலம் காலடி எடுத்து வைத்தார். முதற் படமே அவருக்கு பெரு வெற்றியைத் தந்தது. அன்று தொடக்கம் அவரது இறுதிப்படமான படையப்பா வரை பலதரப்பட்ட பாத்திரங்களில் நடித்து பெரும் புகழ் பெற்றவர். 1966 ல் பத்மஸ்ரீ விருதையும் 1986 ல் பத்ம பூசணம் விருதையும் பெற்றுக் கொண்ட இவரை ஜப்பானிய அரசாங்கம் செவாலியர் விருதை வழங்கி உலக அரங்கில் இவருடைய திறமையைப் போற்றிக் கௌரவித்தது. தமிழ் நாட்டில் தலை சிறந்த பெரியோர்களின் வேடத்தில் நடித்து புகழ் பெற்றவர். வீரபாண்டிய கட்டப்பொம்மனாகவும், செக்கிழுத்த சிதம்பரனாராகவும் நடித்த சிவாஜி கணேசன் ஈ.வே. ரா பெரியாராக நடிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார் . ஆனால் அந்த ஆசை நிறைவேறாமலேயே இவ்வுலகை நீத்து விட்டார். இவருடைய நடிப்புத் திறனைப் பாராட்ப் பல பட்டங்களை வழங்கியுள்ளார்கள். இவருக்கு கலைக்குரசில் எனும் பட்டம் இலங்கையில் வழங்கப்பட்டது. பக்திப் படங்களிலாகட்டும் , சமூகப் படங்களிலாகட்டும் சரித்திரப் படங்களிலாகட்டும் தன்னுடைய நடிப்பினால் தனக்கென ஒரு தனித்துவமான ஸ்தானத்தை நிலை நிறுத்தியிருக்கிறார். நூற்றுக்கணக்கிற்கு மேற்பட்ட படங்களில் நடித்து பல்வேறுபட்ட பாத்திரங்களைத் தாங்கித் தனது அற்புதமான நடிப்பினால் மக்கள் உள்ளங்களில் என்றும் நிலையாக வாழுகின்ற இக் கலைஞன் இவ்வுலகை நீத்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டாலும் அவர் இன்றும் எம் மத்தியில் வாழ்கின்றதைப் போலவே உணருகின்றோம். அவ்வாறான உணர்வினை அவருடைய நடிப்பு நமக்கு ஏற்படுத்துகிறது உலகெங்கும் பரந்து வாழும் ரசிகர்களின் மனதில் அழியாத கௌரவத்தைப் பெற்ற இந்த இமயத்தை உரிய காலத்தில் போற்றத் தவறியதால் இந்திய அரசாங்கம் தன்னையே தாழ்த்திக் கொண்டது வேதனைக்குரியது.

**ரிஷிகர்**

# தென்னிலங்கை நண்பனுக்கு

எப்படியிருக்கிறாய்
நலமா நண்பனே ?
என் காதலிக்கு
கைகொடுக்கும் போது
எனக்கிருக்கும்
குதூகலத்தோடு
உன்னிடம்
கைகோர்க்க
நீட்டியிருக்கும்
எனது கரத்தை சில
சுய நல
நோக்குடைய
அரசியல்வாதியின்
ஆரோக்கியமற்ற
வார்த்தையை நம்பி
அவமதிக்காதே
என்னை . என்
உடலெங்கும்
வெள்ளைப் புறாக்கள்
எனினும் என்
மனங்கள் எல்லாம்
ரணங்கள் என்
பழைய
ஏமாற்றங்களோடும்
இதயத்தின்
வலியோடும்
வருகிறேன்
உன்னையும்
என்னையும் போல
என் மகனும் உன்
மகனும் சண்டை
பிடிப்பதை நான்
விரும்பாததைப்
போல நீயும்
விரும்பமாட்டாய் என
நான் என்
அம்மாவின் அன்பை
நம்புவது போல
நம்புகின்றேன்.
தான் காதலித்த பெண்
கணவனோடு
வருவதை பார்ப்பதை
தவிர்க்கும்
இளைஞனைப் போல
நீயும் என்
மனக்குமறல்களையும்
என் உரிமைகளை
தவிர்க்க முற்படாதே.
அது உனக்கும்
சரியில்லை எனக்கும்
சரியில்லை. உன்
அண்ணன்
ஆனையிறவிலே உன்
அத்தான்
மாங்குளத்திலே
மடிந்தது. உன் அயல்
வீட்டு பள்ளித்தோழன்
பாதையில்
போகையில்
வாகனத்தோடு
வானத்தை நோக்கிப்
பறந்தது பற்றி
எல்லாம் உன்
மனதிலும் ஏராளமான
வலியிருக்கும் என்பது
எனக்குத் தெரியும்
ஏனெனில் பாம்பின்
கால் பாம்பறியும்.
உன்னை நான் புரிந்து
கொள்ளவது போல
நீயும் என்னை
புரிந்து கொண்டால்
தான் ஏ.சி வீட்டிலும்
ஓசி வாகனத்திலும்
வாழ்ந்து கொண்டு
மேடையில் முழங்கும்
மாயாவதிகளான
அரசியல்வாதிகளை
வெற்றி கொள்ளலாம்.
அவர்களது வெற்றி
நானும் நீயும்
சண்டை பிடித்துக்
கொண்டிருப்பது தான்.
நானும் நீயும்
வியாபாரம் செய்தால்
உனக்கோ எனக்கோ
அல்லது நமக்கே
தான் லாபம்
வரவேண்டும். ஆனால்
இங்கே என்ன
விசித்திரம் நானும்
நீயும் செய்யும்
யுத்தத்தால் யாருக்கு
லாபம்
அமெரிக்கனுக்கும்
இஸ்ரேல்காரனுக்கும்
தான் . வேண்டாம்
நண்பா நமக்குள்
சண்டை நான்
விரும்பி கேட்கும்
வானொலியில்
ஒலிபரப்பாகும் பூவும்
பொட்டும் மங்கையர்
மஞ்சரி என்னும்
நிகழ்ச்சிக்கு
மங்கையர்
மஞ்சரியென்று மட்டும்
மாற்றும் படி மடல்
எழுத
எண்ணியுள்ளேன்.
வெண்புறாக்களை நான்
கேட்டேன்
என்பதற்காய்
என்னைச் சுற்றி
ஏராளமான விதவை
வெண்புறாக்கள்
உனைச் சுற்றியும்
அவ்வாறு அவ்வாறு
தான் என்பது
எனக்குத் தெரியும் .
குருவிகளின்
தலைகளில்
பனங்காய்களை
வைத்தது போல
எனக்கும் உனக்கும்
வாழ்க்கைச் சுட்டெண்.
தலையொட்டிப் பிறந்த
சகோதரிகளான லாலா
பிஜானியும், லேடன்
பிஜானியும், இறந்த
போது நான்
கவலைப்பட்டது போல
நீயும்
கவலைப்பட்டிருப்பாய்
என நம்புகின்றேன்.
அவர்களுக்காய்
நானும் நீயும்
கவலைப்படும் போது
ஒரே நாட்டிலே
பிறந்த உன்
உறவினர்கள்
சாகும்போது நான்
சந்தோசப்பட்டிருப்பேனா
இல்லை நண்பா
இல்லை உள்ளத்தின்
ஆழத்திலிருந்து
சொல்கின்றேன்
எனக்கும் கவலைதான்
உன்னை நான்
எப்போதும் எதிரியாய்
பார்த்ததில்லை.
உனக்கு எதிரானவன்
நான் இல்லை . உன்
அரசியல் தலைவன்
தான் எனக்கு
எதிரியே தவிர
நீயல்ல. எனது
முகாரியில் உன்னை
பூபாளம் பாட
வைக்கிறேன் . உன்
அரசியல் வாதி அது
தான் எனக்கு
கவலையளிக்கிறது.
எனது முடிவில்
உனது ஆரம்பம் என
உனக்கு உன்
அரசியல்வாதி
சொல்வதை நீ
ஏற்றுக்கொள்ளாதே.
உன் கல்லறையில்
எனக்கான வாழ்க்கை
ஆரம்பம் ஆவதை
நான் விரும்பவில்லை
நீயும் அதனை
விரும்பாதே உன்
அரசியல் தலைவனை
மட்டும் நான் குறை
சொல்ல
விரும்பவில்லை.
நானும் நீயும்
தராசாய்
இருப்போம் வா
என் அரசியல்
தலைவர்கள்
தனக்காகவும் தன்
மனைவி
மக்களுக்காகவும்
அற்ப
சலுகைகளுக்காகவும்
சோரம் போனவர்
என்பதை
ஏற்றுக்கொள்கிறேன்.

நடந்ததை விடு
நடப்பதைப்
பார்ப்போம்
மீண்டும் உனக்கு
ஞாபகப்படுத்துகிறேன்
. நான் உனக்கு
எதிரியல்ல நான்
முரளியை விட
ஜெயசூர்யாவை
அதிகம்
நேசிக்கிறேன்.
என்பது உனக்குத்
தெரியுமோ
என்னவோ
மீண்டும் மறு
மடலில் உன்னைச்
சந்திக்கிறேன் .

அன்புடன்

இவண்

**வன்னிக்குரலோன்**

# காதில் ஒலிக்கும் காற்று

தென் ஆபிரிக்க சிறப்புக் கவிதை

காதில் ஒலிக்கும் காற்று
தேடலின் ஒலியில்
உறைந்து போகிறது
என்
இன்றைய நாளைய
நினைவுகள்
கண்ணீர்த்துளி மையத்து
நிர்வாணக் காற்றின்
துடிப்பாய்
வயிற்றில் சிலிர்க்கின்றன

இறந்தவர்களால்
மரணத்தின் சிரிப்பைக் கூட
நினைவு கொள்ள முடியவில்லை
வேதனையின் ஓசை போல்
பணிய மறுக்கும் நினைவுகள்
அசையாமல் நிற்பதாய் தோன்றும்
பாலைவனத்துப்
பாம் மர மச்சைக்குள்
விடிகாலை அலைகளில்
மிகுந்து வருகின்றன.
நேற்றைகளின்
கசப்பான வடிவங்கள்
ஒற்றைப் பிறப்பை விட
பெரிதான
சிரிப்பாலான இலைகளில்
கால எல்லையற்ற நாளைகளை
இழைத்து விடுகின்றன.

ஆங்கிலப் பதிப்பு : The Air I Hear
எழுதியவர் : WILLIAM KGOSIT SILE (வில்லியம் கோயிற் யைல்)
நாடு : தென் ஆபிரிக்கா
காலம் : 1963
தமிழில் : அன்செென்ற் ஜோசப்

**கவிஞர் பற்றிய குறிப்பு**


1938 ம் ஆண்டில் ஜோ ஹானஸ் போர்க்கில் பிறந்தார் தென் ஆபிரிக்காவை விட்டு சில காலம் நீங்கிய இவர் டார்- எல்- சலாமில் வெளிவந்த ஸ்பியர் ஹெட் சஞ்சிகையில் பணிபுரிந்தார். 1962ம் ஆண்டில் இருந்து பல்வேறு அமெரிக்கப் அமெரிக்க தொகுப்புக்கள் பலவற்றில் இவரது கவிதைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## கவிதைக்களம்

## பசுமையான நினைவுகளில்

இருண்ட வானமாய் என் இதயம்
ஏனோ வளமிழந்து கிடக்கிறது
மருண்ட என் விழிகளை ஏதோ
நெருடி வருடுகின்றது.
ஆம் நான் அன்று இரசித்த அந்த
இனிமையான தென்றலும்
நீண்ட பெருவயலும்
நிலத்தைத் தொடும் வானமும்
காய்ந்த சருகுகள் காற்றில்
சிறகு விரிப்பதுவும்
சாய்ந்த மரத்தில் இரு சிட்டுக்கள் களிப்பதையும்
பார்த்து ரசித்த ஞாபகம் வந்ததனால்
இன்று இருண்ட வானமாய் என் இதயம்
வளமிளந்து கிடக்கிறது
அன்று மருண்ட என் விழிகளை
இன்று ஏதோ நெருடி வருடுகிறது

காயத்திரி
வன்னி



# ஓ அமெரிக்காவே!



ஓ! அமெரிக்காவே உன் ஏகாதிபத்தியத்தை
நான் வரவேற்கின்றேன்
நீ ஜனநாயகம் தெரிந்தவன்
என்கின்றனர் பலர்
உன் எதிர்கால பிரஜைகள் மீது - நீ
கொண்டுள்ள அக்கறை!
இங்கே நிலமை வேறு
உன்னையா ஜனநாயகம் தெரியாதவன்
என்கின்றனர்
சிரிப்பதா சிந்திப்பதா புரியவில்லை

உலகில் உள்ள அனைவரையும்
சர்வதேச நீதி மன்றில் நிறுத்தலாம்
என்கிறாய்
உன் நாட்டு பிரஜைகளை நிறுத்த முடியாது
என்கிறாய்
எவ்வளவு அக்கறை உன் பிரஜைகள் மீது
நீயா ஜனநாயகம் தெரியாதவன்
உன் நாட்டில் இல்லாத வளங்களா
வேறு நாட்டில் உள்ளது

இருக்கும் போதே பிற நாடுகளைச் சுரண்டுகின்றாயே
எவ்வளவு அக்கறை
உன் எதிர்காலப் பிரஜைகள் மீது
நீயா ஜனநாயகம் தெரியாதவன்

ஓ! அமெரிக்காவே உன்னை நான்
நேசிக்கின்றேன்
உன் பிரஜைகள் மீது நீ கொண்டுள்ள
அக்கறையை நேசிக்கின்றேன்.
அதற்காக ஜனநாயகம் எனக் கூறிக் கொண்டு
பலரை சிரிக்க வைத்தாய் ஈராக்கில்
இன்னும் பலர் உறவையும் உணர்வையும்
பறிகொடுத்து கதறுவதை மறந்து விட்டாயா!
அல்லது மறைத்து விட்டாயே!
எனக்குப் புரியவில்லை உன் ஜனநாயகம்.

ஹிட்லரோடு உன் நாட்டு ஜனாதிபதியை
ஒப்பிடுகின்றனர் சிலர்
அவர்களுக்கு உன் சாணக்கியம்
புரியவில்லைப் போலும்
ஹிட்லர் மட்டும் காலம் உணர்ந்து
செயற்பட்டிருந்தால் இன்று
உலகம் அவன் கையில்
ஆனால் நீ அப்படியல்ல

உணர்ந்து செயற்படுகின்றாய்

என்ன செய்ய உனக்கு வியட்நாமில்
அனுபவம் போல்
ரஷ்யாவில் அவனுக்கு கிடைக்கவில்லை
கிடைத்திருந்தால் ஒரு வேளை அவன்
இன்று வாழக்கூடும்
என்ன செய்ய நீ சுதாரித்துக் கொண்டாய்
அவன் சுருண்டு விட்டான்

நீ ஐ.நா.வை மதித்து சில வேளை ஈராக்
யுத்தத்தை தவிர்த்திருக்கக் கூடும்
ரஷ்யா பிரான்ஸ் ஜேர்மன் போட்ட கூட்டணிக்கு
பாடம் புகட்ட எண்ணி விட்டாய்
இதனால் ஐ. நாவை துச்சமென எண்ணிவிட்டாய்
இப்போது புரிகின்றது இந் நாடுகளுக்கு
உன் ஜனநாயகம்
இங்கு பலர் ஆயுத பலத்தால் உலகை நீ ஆள நினைக்கின்றாய்
என்கின்றனர்
உன் பொருளாதார பலத்தால் உலகை
நீ ஆண்டு கொண்டு இருப்பதை
மறந்து விட்டார்கள் போலும்
வடகொரியா மறைமுகமாக உணவிற்கும்
கெஞ்சுவது யாருக்குத் தான் புரியாது
அமெரிக்காவே என்ன உன் ஜனநாயகம்
உன் ஜனநாயகத்தை நான் மதிக்கிறேன் உன்னை நான் ஆட்ட முடியாது
உன்னிடம் கெஞ்சிக் கேட்கின்றேன்
நீ எங்கள் ஜனநாயகத்தைக்
கொஞ்சமாவது மதிப்பாயா?

நி.சுதாகர்
மாணவன்
கொழும்பு பல்கலைக்கழகம்

# ஏமாற்றப்பட்ட தமிழினம்

2000 ஆண்டுகளுக்கு மேலாக வடக்குக் கிழக்கில் தமிழர்களும் தென்மேற்கில் சிங்களவர்களும் வாழ்ந்து வருகின்றனர்

மையப்பகுதியை வலிமை கூடியவர்கள் மாறி மாறிக் கைப் பற்றி ஆண்டு வருகின்றனர்.

கி.பி 1505 இல் போர்த்துக்கேயர் முதன் முதலில் இலங்கையில் காலடி எடுத்து வைத்தனர். அந்நேரத்தில் இலங்கையில் யாழ்ப்பாணஅரசு- கோட்டை அரசு- கண்டி அரசு ஆகிய மூன்று அரசுகள் இயங்கின.

இந்த மூன்று அரசுகளிலும் பழைமையானதும் வலுவானதுமாகத் திகழ்ந்தது தமிழரின் அரசான யாழ்ப்பாண அரசுதான். தரைகடல் வலுவோடு வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதிகள் செய்து யாழ்ப்பாண அரசு உயர்ந்திருந்தமையை போர்த்துக்கேயர் மற்றும் ஊரோடிகளின் குறிப்புக்களிலே நாம் பார்க்கலாம். சிங்கள வரலாற்று நூல்களும் இலக்கியங்களும் இதே செய்திகளை எமக்குத் தருகின்றன. இந்த மூன்று அரசுகளினதும் வீழ்ச்சிக்கு அன்றைய சிங்கள அரசுகளே காரணமாக இருந்தது என்பது இன்றைய சிங்கள ஆட்சியாளரால் விழுங்கப்பட முடியாத அல்லது விழுங்க மறுக்கப்படுகின்ற கசப்பான உண்மை வரலாறு ஆகும்.

தமிழர்கள் தமது ஆட்சி இறைமையை ஐரோப்பிய நாடுகளிடம் இழந்தாலும் அதற்கான காற்கோளை இட்டது சிங்கள அரசுகள் தான் என்பது நினைவிலே நிறுத்தப்பட வேண்டிய வரலாற்றுப் பதிவுகளாகும்.

கோட்டை அரசைச் சேர்ந்த மூன்று சிங்கள உடன் பிறந்தவர்களுக்குள் ஏற்பட்ட அரியணை அவா அந்த அரசைச் சரித்தது. புவனேகபாகு றைகம்பண்டார மாயதுன்னை ஆகிய அந்த மூவருக்குள் ஏற்பட்ட பணி நிலைப் பிணக்குகள் போர்த்துக்கேயரை வலிந்து கோட்டை அரசியலுக்குள் வரவழைத்தன. கி .பி 1597இன் பிறகு கோட்டை அரசின் முடி போர்த்துக்கேயருக்குத் தான் என்று அடிமை முறி எழுதிக் கொடுத்து விட்டு இறந்தவன் புவனேகபாகுவின் மகள் வழிப்பேரன் தர்மபால. இதனால் கோட்டை அரசு போர்த்துக்கேயரின் கைகளிலே விழுந்தது. கோட்டையரசைக் கைப்பற்றும் போர்த்துக்கேயரின் முயற்சிக்கு எதிராக கோட்டைச் சிங்களவருக்குச் சார்பாகப் போர்க்கொடி தூக்கியது முதலாம் சங்கிலிய மன்னனது யாழ்ப்பாணத் தமிழரசு தான். வேற்று இனமாக இருந்த போதிலும் ஒரு தீவுக்குள்ளே வாழ்நத ஒருமைப்பாட்டு உணர்வினால் உதவி வந்த யாழ்ப்பாணத் தமிழரசின் முதுகிலே குத்தியது அன்றைய சிங்களக் இன வெறியர்கள் தான். தம்மைத் தாமே அடிமைப் படுத்திக் கொண்டது மட்டுமன்றிச் சிங்கள கூலிப்படைகளாகப் போர்த்துக்கேயப் படைகளுக்குத் துணையாக வந்து தமிழர்களின் பேரரசான யாழ்ப்பாணத் தமிழரசைப் போர்த்துக்கேயர் வீழ்த்த அவர்கள் பேருதவி புரிந்தனர். தமிழர் தாயகமான வடக்கு கிழக்கிலே விரிந்து பரந்து இருந்த யாழ்ப்பாணத் தமிழரசு அண்டை அரசுகளான கண்டி அரசினாலோ கோட்டை அரசினாலோ போரில் வீழ்த்தப்படவில்லை. போர்த்துகேயரிடம் தான் யாழ்பாணத் தமிழரசு தனது இறைமையை 1619 இல் இழந்தது.

போர்த்துக்கேயரிடமும் தொடர்ந்து வந்த ஒல்லாந்தரிடமும் கண்டி அரசு தனது இறைமையை இழக்கவில்லை. அதன் புவியியற் சாதகம் அதனைக் காப்பாற்றி இருந்தாலும் கண்டி



ஆட்சிப் பகுதியை 1815 இல் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஆண்ட ஆங்கிலேயர் கண்டி அரசைக் கைப்பற்றினர். அந்த வீழ்ச்சிக்குச் சிங்கள மேல் மட்டத்தின் காட்டிக் கொடுப்புக்களே காரணமாயிற்று என்பதை இலங்கையின் பிற்கால வரலாறு தெளிவாகச் சொல்கிறது. கண்டி அரசு ஒரு பௌத்த சிங்கள அரசாக இருந்த போதும் அதனை கி.பி 1739 முதல் 1815 வரை 76 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டவர்கள் தமிழ் மன்னர்கள் தான். அவர்களது ஆட்சிக் காலத்தில் கண்டி அரசைக் கைப்பற்றப் பல தடவைகள் ஒல்லாந்தராலும் ஆங்கிலேயராலும் முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டாலும் அவர்கள் கேவலமான தோல்விகளையே எதிர் கொண்டனர். எனினும் அந்தத் தமிழ் அரசர்களது அரண்மனைக்குள்ளேயே பௌத்த சிங்கள வெறி நுழையத் தொடங்கியது. அது இலங்கை வரலாற்றில் வேதனை மிகுந்த சம்பவமாகும். தனது இனத்திலிருந்தே தனக்குரிய மனைவியரை மன்னன் தேடியதும் சிங்களப் பௌத்த அரசின் மன்னனாக ஒரு தமிழன் எப்படி இருக்க முடியும் என்ற சிங்களப் பெருங்குடிச் சிந்தனையும் கண்டி அரசின் மீள முடியாத சறுக்கலுக்குக் காரணமாயிற்று. முதல் அமைச்சர் பிலிமத்தலாவ முதலிலேயே சூழ்ச்சி செய்தான் எனினும் தமிழ் மன்னன் கண்ணுச் சாமி

- எழுதுவது சத்தியா -

என்ற சிறி விக்கிரமராஜசிங்கன் சீறி வந்த ஆங்கிலப் படையைச் சிதறடித்தான். பின்பு எகலப்பொல என்ற அமைச்சன் சூழ்ச்சி செய்தான். இதன் காரணமாகச் சிங்கள இன வெறியின் தூண்டுதலோடும் சிங்கள அமைச்சர்கள் மற்றும் போர் வீரர்களின் கயமை நிறைந்த காட்டிக் கொடுப்புகளோடும் தமிழ் மன்னன் வீழ்த்தப்பட்டான். அப்போது கண்டி அரசும் இலகுவாக ஆங்கிலேயரால் கையகப்படுத்தப்பட்டது. சிங்கள பௌத்தம் காக்கப்படும் என்ற வாக்குறுதியைப் பெற்றுக் கொள்வதில் மட்டும் காட்டிக் கொடுத்த சிங்களவர் வெற்றி கொண்ட போதும் காலப் போக்கில் ஆங்கிலேயர் அவர்களைப் பதவிப் பொறுப்புக்களில் இருந்து இறக்கிய போது தான் விழிக்கத் தொடங்கினர். கடைசியாக கண்டியரசை ஆண்ட தஞ்சை புதுக்கோட்டை புலாம்பட்டியைச் சேர்ந்த தமிழ் மன்னன் கண்ணுச் சாமி என்ற சிறீ விக்கிரமராஜ சிங்கன் ஆங்கிலேயரால் வேலூருக்குக் கொண்டு சென்று சிறை வைக்கப்பட்டு 1832 இல் அங்கு இயற்கைச் சாவடைந்தான். பெரும் மதிப்புடன் அங்கு அவனுக்காக நாட்டப்பட்ட நினைவுக்கல்லும் முத்து மண்டபமும் இலங்கை ஆட்சியில் தமிழரின் பெரும் பங்களிப்பை இன்னும் பேசி நிற்கின்றன. 1815 இல் கண்டி அரசு வீழ்ந்த பின்னரும் கூட 1833 வரை இலங்கைத் தீவிலிருந்த மூன்று ஆட்சிப்பகுதிகளிலும் தனித் தனியாகவே ஆட்சி நடத்தப்பட்டு வந்தன . இதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

ஒன்று மொழி இன பண்பாட்டு வாழ்வியல் முறைகளினால் சிங்களவரை விட முற்றிலும் மாறுபட்ட தன்மையைத் தமிழர்கள் கொண்டிருந்தனர்.

இரண்டு சிங்களவர்களையும் ஒரு சேர ஆள்வதில் இருந்த இடர் பாடு .

மூன்று 1815 இல் கண்டி அரசு தமிழ் மன்னனிடம் இருந்து கைப்பற்றப்பட்ட போது கண்டிப் பகுதி தனியாகவே ஆளுகைக் குட்படுத்தப்படும் என்று ஆங்கிலேயரால் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியாகும்.

அத்தோடு கரையோரச் சிங்களவருக்கும் கண்டிச் சிங்களவருக்கும் இடையே நிலவி வந்த வாழ்வியல் முரண்பாடுகள் ஆங்கிலேயரின் ஆளுகைக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தின. எனினும் 1833 இல் கோல்புறூக்கின் அரசியல் சீர்திருத்தத்தின்படி முழு இலங்கையும் ஒரு ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டு மூன்று ஆட்சிப் பகுதிகளும் ஒன்றிணைக்கப்பட்டு ஐந்து நிர்வாக மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அப்போது தமது பகுதியான நுவரகலவெவா (அனுராதபுரம்) தர்மங்கடுவ (பொலநறுவ) ஆகிய இப்பகுதிகளை வடக்கு கிழக்கு மாகணங்களோடு இணைத்ததைக் கண்டிச் சிங்கள மக்கள் கடுமையாக எதிர்த்தனர். இருப்பினும் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் உள்ள முரண்பாடுகள் வாழ்வியல் இடர் கள் வேறுபாடுகள் கிளைக்கோன் குறிப்புக்களில் மிகத் தெளிவாகவே வகுத்துக் காட்டப்பட்டுள்ளன.

தமிழ் சிங்கள மக்களை ஒன்றாக ஆள்வதில் உள்ள பல இடர்பாடுகளை தனது பட்டறிவினால் நன்றாக அறிந்த ஆங்கிலேய ஆளுனர் சேர். உவில்லியம் கிறேகரி 1873 இல் தமிழர் பகுதிகளான இன்றைய வடக்குக் கிழக்கு மாணங்களுடன் அன்றிணைந்திருந்த சிங்களப் பகுதிகளான நுவரகல வெவா (அனுராதபுரம்) தம்மங்கடுவ (பொலநறுவ) ஆகிய பகுதிகளை மீண்டும் வேறாக்கி புதிதாக வடமேல் மாகாணம் எனத் தனி மாகாணத்தை உருவாக்கினார். இலிந்தினைப் பகுதி கிழக்கு மாகாணத்திலிருந்து பிரிக்கப்பட்டு புதிதாக உருவாக்கப்பட்ட ஊவா மாகாணத்துடன் இணைக்கப்பட்டது. 40 ஆண்டுகளுக்குள் சிங்களப் பகுதிகள் வேறாக்கப்பட்டு தமிழ்ப்பகுதிகளைக் கொண்ட வடக்குக் கிழக்கு மாகணங்கள் உருவாக்கப்ட்டன. 1871 இல் நடத்தப்பட்ட இலங்கை குடித்தொகைக் கணக்கெடுப்புப் பட்டியல் வடக்கு கிழக்கு மாகாணங்கள் முழுமையான தமிழர் பகுதிகளே என்பதை மெயப்பிக்கின்றன. 1833 இல் நடைமுறைக்கு வந்த கோலபுறூக் அரசியல் திட்டம் 1931 வரை சிறு சிறு திருத்தங்களோடு நிலவியது. கோல்புறூக்கினால் நிறுவப்பட்ட சட்டசபையே காலகதியிற் பல்வேறு சீர்திருத்தங்களின் ஊடாக மெல்ல மெல்ல சட்ட சபை அரசாங்க சபை என்ற நிலையிலிருந்து வடிவெடுத்து தமிழர்களின் தூக்குக் கயிறாக இலங்கைப் பாராளுமன்றமாக மாறியது என்பது வரலாறு ஆகும்.

> மூன்று அரசுகளினதும் வீழ்ச்சிக்கு அன்றைய சிங்கள அரசுகளே காரணமாக இருந்தது என்பது இன்றைய சிங்கள ஆட்சியாளரால் விழுங்கப்பட முடியாத அல்லது விழுங்க மறுக்கப்படுகின்ற கசப்பான உண்மை வரலாறு ஆகும்.



ஏமாற்றம் தொடரும்

சத்தியா

## இந்த வாரம் நான்



எனது பெயர் பிரான்சிஸ் டினுஷா நான் வவுனியா இறம்பைக் குளம் மகளீர் மகாவித்தியாலயத்தில் 4 ம் தரத்தில் கல்வி கற்கிறேன் நான் நன்றாகக் கதை சொல்லுவேன் எனக்கு ஒரு தங்கையும் ஒரு தம்பியும் இருக்கிறார்கள் . நான் செந்தணலின் சிறுவர் அரங்கில் இந்த வாரம் இடம் பெறுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.


# சிறுவர் அரங்கம்

## பாட்டு

குருவிக் குஞ்சே குருவிக்
குஞ்சே எங்கே போகிறாய்
கொத்திக் கொத்தித்
தானியத்தைத் தின்னப்
போகிறேன்.

சின்ன அணில்ப் பிள்ளை
நீயும் எங்கே போகிறாய்
வண்ண மாம்பழத்தை நானும்
தின்னப் போகிறேன்

செல்லப் பாப்பா செல்லப் பாப்பா
எங்கே போகிறாய்
பள்ளிக்கூடம் சென்று நானும்
படிக்கப் போகிறேன்.




## யார் பெரியவன்?



ஒரு நாள் ஐந்து விரல்களுக்கு மிடையில் யார் பெரியவன் என்பது பற்றி வாக்குவாதம் ஒன்று நடந்தது.


**பெருவிரல் கூறியது:**
நான் தான் கையில் முதலில் இருப்பதோடு என்னை மட்டும் தானே பெரு விரல் எனக் கூறுகிறார்கள். அதனால் நான் தான் பெரியவன்




**சுட்டு விரல் பேசியது:**
என்னைத் தான் எந்த விடயத்தை சுட்டிக்காட்டுவதற்கும் பயன்படுத்துகிறார்கள். அதாவது அதிகமாக நானே நல்லவற்றை மற்றவர்க்கு சுட்டிக் காட்டுகிறேன் அதனால் நான் தான் அனைவரிலும் நான் தான் பெரியவன்.



**நடுவிரல் பேசியது:**
நான் தான் பெரியவன். எல்லோரையும் விட பெரியவனாக இருக்கிறேன் எல்லோரையும் விட தான் தான் பெரியவன்.



**நான்காவது விரல் கூறியது:**
இல்லை இல்லை நான் தான் பெரியவன். எனக்குத்தானே எல்லோரும் மோதிரம் அணிந்து சிறப்பிக்கிறார்கள். அத்தோடு சிறப்பாக மோதிர விரல் என்று கூட கூறுகிறார்கள். அதனால் நான் தான் பெரியவன்.



**இறுதியாக சின்ன விரல் கூறியது:**
உங்கள் அனைவரிலும் பார்க்க நான் தான் உயர்ந்தவன்.

ஏனைய நான்கு விரல்களும் கூடி நகைப்புடன் ஒன்றாக கேட்டனர். அதெப்படி எல்லோருக்கும் இளைவனும் குட்டையானவனும் நீ தானே. நீ எப்படி பெரியவனாக முடியும்?



**சின்ன விரல் கூறியது:**
கடவுளை வணங்கும் போது எனக்கு மட்டும் தானே அவன் அருகில் இருக்கும் பாக்கியம் கிடைக்கிறது. அதனால் நான் தான் அனைவருக்கும் பெரியவன்.

ஏனைய நான்கு விரல்களும் தமது கர்வத்தை விட்டு சின்ன விரலின் பணிவையும் பக்தியையும் பார்த்து வாயடைத்துப் போய் நின்றன.

கடந்த வாரத்திற்கான

## சித்திரமும் சிறுகதையும்

# அதே மனிதர்

பால் நிலவு பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தது. பளிங்கு நீரில் சல சலத்த நீரோடை சருகுகளை அள்ளிச் செல்வது போல், கோதினியின் மனசையும் இழுத்துச் சென்றது பதினாறு வருடங்கள் பின்நோக்கி.

கோதினிக்கு இப்பொழுது வயது பதினாறு, சலசலவென ஓடும் நீரோடை மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தாது ஓர் அபூர்வமான மனநிலையினை ஏற்படுத்தியது, நிலவும் நீரும் ஊடல் கொண்டு ஒருவரை ஒருவர் வெட்கப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தன. தீடிரென நிலவின் பால் ஒளி அதிகரித்துச் சட்டென மங்கிவிட்டது. பறவைகள் கலைந்து படபடவென பரந்து விரிந்த உலகினிற்குள் மறைந்து விட்டன, கோதினிக்கு



நறுக்கென்று பயநரம்பொன்று அறுந்து உடலெங்கும் பரவியதுயாரும் இல்லாத குன்றுகள் நிறைந்த நீரோடையில் தான் தனித்திருக் கிறேன். என்ற உணர்வு. முதன் முத லாய் அவளுள் எழுந்தது.

கோதினி வவுனியா நகரில் இருந்து முல்லைத்தீவுற்குச் சென்றிருந்தாள் 16 ஆண்டுகளிற்குப் பின்.

ஊர் என்ன உறவென்ன என நிஜங்களை அறியாதவள் அவள், இதற்கு இருபது வருடங்களாக நடந்து கொண்டிருந்த யுத்தம் கூட ஒரு காரணம், கோதினி பெற்றோரை அறியாதவள்.

பெற்றோரின் அரவணைப்பின்றி இருந்த தன்னை ஒரு குறையுமின்றிப் பதினாறு வருடங்கள் வளர்த்தாளாக்கிய அந்தப் பெற்றோருக்காய், இவள் தன்னை ஈன்ற தாயிடம் வேண்டினாள்.

மௌனமாகக் கண்களை மூடி மலர்களை நீரோடையில் கரைத்தவளின் உள்ளம் ஊமையாக அழுதது.

அம்மா நீயும் . அப்பாவும் நிலாவில் ஏறி என்னிடம் வருவீர்கள் என நான் எத்தனை முறை நேரம் கூடப் பாராமல் பனியில் நனைந்து அப்படியே உறங்கிப் போயிருப்பேன்.

நீ ஏன் என்னை மட்டும் தனியாக விட்டுப் போனாய் என்னையும் கூட்டிச் சென்றிருக்கலாம் தானே?

உன் உயிராக இருந்த என்னை உதறி விட்டு ஏன் நீ மட்டும் போனாய் அம்மா

எனக்கு இந்த பகட்டான வாழ்வு பாசாங்கான உறவுகள் எதுவுமே பிடிக்கவில்லை

அப்பா நீ கூட மூன்றாம் பட்சம் தானா?

ஆனால் உன்னைப் பற்றியும் அம்மாவைப் பற்றியும் ஊராரும் உறவுகளும் பேசும் போது இந்த உலகமே அழுக்காய் தெரிகிறதப்பா, ஏன் நீ என் கண்ணில் படாமல் மறைந்தே வாழ்கிறாய் என் உறவு உனக்குப் பிடிக்கவில்லையா?

என அழுதாள் நிமிடங்கள் நகர விம்மல் பெரிதானது கோதினியின் எண்ணங்கள் கடந்த காலத்தை நோக்கி நகர்ந்தன.

மாலினி முல்லை நிலத்தில் பெரிய நிலப்பரப்பிற்குச் , சொந்தமான தனவந்தர் ஒருவரின் மூத்த பெண் ஊரில் மிகவும் வசதியாக வாழ்ந்தவர்கள் மாலினிக்குத் தேவிகா என ஒரு தங்கையும் உண்டு மாலினி தன்னோடு கூடப்பயின்ற ஒருவனைக் காதலித்தாள், அவனுடைய ஜாதி குறைந்த ஜாதியாம் என வீட்டில் பலத்த எதிர்ப்பு, அத்தோடு அவளுக்கு வெளிநாட்டில் மாப்பிள்ளை பேசி அவரும் திருமணத்தை முற்றாக்க உள்ளூரிற்கு வந்து விட்டார். ஆனால் துளி கூட வெளிநாட்டு திருமணத்தை விரும்பாத அவள் காதலித்த இளைஞனுடன் சென்று விட்டாள்.

ஊரையே அடக்கியாண்ட தனவந்தரின் குடும்பம் இப்பொழுது ஊரைப்பார்த்து அடங்கி ஒடுங்கி வாய்பொத்தித் தலைகுனிந்து நின்றது.

தொடர்ச்சியாக மாலினுக்கு ஒரே பிரச்சினைகள் உறவுகள் அவளை ஒதுக்கி வைத்தன , சுற்றம் வெறுத்தது அவர்களை வறுமை வந்து விரட்டியது தட்டுத்தடுமாறி ஒரு வருடத்தை ஓட்டி விட்டார்கள்.

மாலினியின் வயிற்றில் கருவாகி உருவானவளே கோதினி. கோதினி பிறந்து முப்பதாம் நாள் மாலினி குன்றுகள் நிறைந்த நீரோடையில் இருந்து உடல் சிதைந்த நிலையில் பிணமாக மீட்டெடுக்கப்பட்டாள்.

முப்பது நாள் சிசுவான கோதினியை மாலினியின் தங்கை தேவிகா தான் பெற்ற குழந்தை போலத் தாங்கினாள், கோதினியின் தந்தை இறுதிச்சடங்கை முடித்து ஆற்றில் சாம்பல் கரைத்துச் சென்றவர் தான் இது வரை எந்தத் தகவலும் இல்லை. தந்தையின் முகம் கூடத் தெரியாமால் அவன் அன்பிற்காய் ஏங்கி, ஏங்கி எத்தனை முறை அழுதிருக்கிறாள் அவள், ஆனால் பணம் மட்டும் செலவிற்கு அதிகமாக மாதம் தவறாமல் அனுப்பி வைப்பார்.

சடக் கடக்கென யாரோ நடந்து செல்லும் சத்தம் கேட்டு கோதினி சுயநினைவு வந்து திரும்பிப் பார்த்தாள், வழமையாகக் காணும் அதே இடத்தில் அந்த மனிதர், முகம் நிறைய காடுபோல்த் தாடி உதட்டில் துடிதுடிக்கும் சோகப்புன்னகை , கண்களில் ஆர்வம் நிறைந்த பார்வை, அவள் திரும்பிக் கொண்டாள்.

பாவம் இந்த மனிதர் எதையோ தொலைத்து விட்டுத் தேடுவது போல் தெரிகிறதே இரண்டு மணி நேரங்களாகத் தேடுகிறாரே, நான் என்ன தான் செய்ய முடியும் என எண்ணிக் கொண்டாள் . அதனால் அவளுக்குத் தெரியவில்லை அவர் தேடும் பொருளே தான் தான் என்பது.

மீண்டும் முகில் திரைக்குள் ஒளிந்திருக்கும் நிலவினைப் பாத்தாள், அது அவளுக்கு தன் தந்தை ஒளிந்திருப்பதைப் போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்தியது, அவள் மனம் மீண்டும் விம்மியது

ஏனப்பா என்னை உனக்குப் பிடிக்கவில்லையா எதற்காக என் கண்ணிலிருந்து மறைந்தே வாழ்கிறாய் அப்படியானால் எதற்காக என்னை உருவாக்கினீர்கள் பணம் தானா வாழ்க்கை , உன் அன்பிற்காக நான் எவ்வளவு ஏங்குகின்றேன் உனக்குப் புரியவில்லையா. அந்த மனிதர் கிட்ட நெருங்கி இவளை இமை கொட்டாமல் பார்த்தார். அவருக்குள் இருந்த ஆர்வமும் இவளது சோகமும் மோதிக்கொண்டன. நான் தேடுவது இவளாக இருக்கக் கூடாதா என அவர் எண்ணம் ஓடியது. அவரைக் கூர்ந்து பார்த்த இவள் இவர் நான் தேடும் அதே மனிதராக இருப்பாரோ என எண்ணினாள்

**வன்னி குருவிச்சி**

# கலை இலக்கியச் சங்கமம்

## ஈழத்துச் சோமுவுடன் ஒரு நேர்காணல

வாழ்வையும் மனிதர்களையும் நேசிக்க முடியாத மனித நேயம் இல்லாதவர்களால் மனிதர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு இலக்கியம் படைக்க முடியாது.

- ஈழத்து சோமு கூறுகிறார்.

ஈழத்து இலக்கிய உலகில் ஈழத்து சோமு என்ற பெயரோடு அறிமுகமாகி சமூக உணர்வோடு மக்களின் பழக்க வழக்கங்களையும் லாழ்க்கைத் துடிப்புக்களையும் நல்ல சொற் சித்திரங்களாக்கி அதனை வாசக நெஞ்சங்களின் பதிய விட்ட பெருமை இவருக்குண்டு.

இவரது இயற்பெயர் பி. சோமகாந்தன் . கரணவாய் என்ற கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 50 ஆண்டுகால இலக்கிய வாழ்வில் பல சாதனைகள் புரிந்த இவரை அண்மையில் அவரது இல்லத்தில் சந்தித்து இலக்கியம் குறித்து உரையாடிய போது

**கேள்வி: நீங்கள் இலக்கியத்திற்கு வந்ததன் பின்புலம் என்ன?**

பதில் : நான் கரணவாய் என்ற கிராமத்தைச் சேர்ந்தவன் எனது மாணவப் பருவத்தில் அங்கு ஒரு வாசிக சாலையோ,நூல்களைப் பெற்றுக் கொள்ளும் வசதியோ இருக்க வில்லை எனக்குத் தெரிந்த எழுத்தாளர்களும் அப்போது அங்கு இருக்கவில்லை , பாடசாலையில் நல்ல தமிழ் நூல்களைக் கொண்ட நூல்நிலையமும் இருக்க வில்லை. ஏனெனில் அப்பொழுது மாதம் மாதம் கட்டணம் செலுத்தபி படிக்கின்ற ஆங்கிலக் கல்லூரி அது. இந்தப் பின்னணியில் எமது தகப்பனாரின் ஆலயத்தில் புராண படனங்கள் திருவெம் பாவைப் படிப்புக்கள் , மிகச் சிறப்பாக நடைபெறும் இவற்றை நான் அழமாக கூர்ந்து அவதானித்து ரசிப்பதுண்டு.


எனது வகுப்பில் ஒரு மாணவனுக்கு கண்டியில் உள்ள அவரது தகப்பனார் கல்கி, மற்றும் தி.மு.க நூல்களை அனுப்பி வைப்பார். அக்கால சுதந்திரன் பத்திரிகையும் எமது கிராமத்தில் உள்ள கடை யொன்றுக்கு வருவதுண்டு. இவற்றை வாசித்த ஆர்வத்தினாலும் வகுப்பில் ஆசிரியர்கள் தமிழப் பாடத்தில் எனக்களித்த அறிவினாலும் தமிழில் நான் மிகச் சிறந்த மாணவனாக விளங்கினேன். வகுப்பில் நான் எழுதகின்ற கட்டுரைகளை ஏனைய மாணவர்களுக்கு உதாரணக் கட்டுரைகளாக ஆசிரியர்கள் வாசித்துக் காட்டுவர்ர்கள் அந்த ஊக்கம் என்னை மேலும் எழுதத் தூண்டியது. உதாரணமாக மது ஒழிப்பு ,மிருகங்களைப் பலி கொடுத்தல், மகாகவி பாரதி போன்ற கட்டுரைகளை நான் உணர்ச்சிகரமாக எழுதினேன் . அவற்றில் சிலவற்றை அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வெளி வந்து கொண்டிருந்த சமூகத் தொண்டன் பத்திரிகையில் வெளியிட்டு மீண்டும் மீண்டும் அவ்வாறான கட்டுரைகளை அனுப்பி வைக்குமாறு என்னை ஊக்குவித்தார். அதன் ஆசிரியர் கவிஞர் விடிவெள்ளி க.பெ. முத்தையா அவர்கள்.

தவிர அதே கால கட்டத்தில் சுதந்திரன்,ஈழகேசரி, பத்திரிகைகளில், சிறுவர் பகுதிகளிலும் எழுதத் தொடங்கினேன். எனது சிறுகதைகள் சதந்திரனிலேயே அதிகமாக ஆரம்ப காலத்தில் வெளியாகின. ஆனாலும் சிறந்த கதைகள் எனக் கூறப்படுபவைகளை கைலாசாபதி அவர்கள் தினகரனில் ஆசிரியராக இருந்த காலத்திலேயே எழுதியதாக நான் கருதுகின்றேன். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் எனது ஈடுபாடு ஈழத்திற்கென தனித்துவமான மண்வாசனை கொண்ட சிறுகதைகள் படைக்க வேண்டுமென்ற எண்ணத்தை என்னிடம் ஏற்படுத்தின. அதனால் தான் எனது சிறுகதைகளில் வடமராட்சித் தமிழ் கூடுதலாகக் காணப்படுகின்றது.

**கேள்வி : தங்களது 50 ஆண்டு கால இலக்கிய வாழ்வைத் திமபிப் பார்க்கையில் உடனே நினைவுக்கு வரக்கூடிய பத்திரிகைகள் , எழுத்தாளர்கள் ?**

பதில் : உடனே மனதுக்கு வரக்கூடிய பத்திரிகைகள் , சுதந்திரன் , தினகரன், வரதர் வெளியிட்ட புதினம், சஞ்சிகைகளில் கலைச்செல்வி, மல்லிகை, எழுத்தாளர்களில் அ.ந. கந்தசாமி, வரதர் , சூ.வே, கனகசெந்திநாதன், டானியல் ஆகியோர்.

**கேள்வி: ஈழத்தில் விமர்சனத் துறையின் செயற்பாடுகள் திருப்தியாய் இருப்பதாக நினைக் கிறீர்களா?**



பதில் : இலக்கிய திறனாய்வுத்துறையில் முன்னரே பலர் இடுபட்டிருந்த போதிலும் அதற்கான சரியான திசை மார்க்கத்தைக் காட்டியவர்கள் வழிநடத்தியவர்கள் காலஞ்சென்ற பேராசிரியர் கைலாசபதி பேராசிரியர் கா. சிவத்தம்பி பேராசிரியர் நுஃமான் என நான் கருதுகிறேன். எனினும் அவர்கள் வழி நடத்திய பாதையில் பல இளந்தலை முறையினர் முன்னுக்கு வந்திருக்கிறார்கள் என்பதையும் கவனத்திற்கு எடுக்க வேண்டும்.

கேள்வி: வாழ்வையும் மனிதர்களையும் நேசிக்கத் தெரிந்த படைப்பாளிகள் மட்டுமே உன்னத படைப்புக்களைத் தர முடியும் என நான் கருதுகிறேன். தாங்கள் என்ன நினைக்கீறீர்கள்?

**கேள்வி :**

பதில் : ஒரு எழுத்தாளனுக்கு இருக்கவேண்டிய அடிப்படை மனித நேயமே மனித நேயம் இல்லாதவர்களால் மனிதர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு இலக்கியத்தைப் படைக்க முடியாது இலக்கியம் வெறும் சுவைப் பொருளல்ல மனிதர்கள் இருக்கின்ற நிலையிலிருந்து மேலும் மேம்படுத்துவதற்கான சிந்தனையைத் தூண்டுவதாக இலக்கியம் இருக்க வேண்டும்.

**கேள்வி : ஒரு படைப்பு உணர்வு மட்டத்தோடு நிற்பது போதுமானதெனக் கருதுகிறிறீர்களா? அல்லது சிந்தனையை , அறிவை நவீன இலக்கியங்கள் வலியுறுத்துவது தவறா?**

பதில் : இலக்கியம் உணர்வு மட்டத்தோடு மட்டும் நிற்பது சரியல்ல அப்படிச் சிலர் கருதுவதால் தான் செக்ஸ் உணர்வுகளைத் கிளறுகின்ற நாவல்களும் , ஜனரஞ்சகமான கதைகளும் அமோகமாக ஒளித்து வாசிக்கப்படுகின்றன. இலக்கியம் என்பது உணர்வுகளுக்குத் தீனிபோடும் சரக்கல்ல இலக்கியம் வாசகனுக்கு ஒரு நல்ல செய்தியைச் சொல்ல வேண்டும். வாசகனுடைய சிந்தனையைத் தூண்ட வேண்டும் அதன் மூலம் அவன் தனக்கும் சமுதாயத்திற்கும் பயனுள்ளதாகச் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்.

**கேள்வி : இலங்கையில் தங்களைக் கவர்ந்த பத்திரிகை ஆசிரியர்கள் யாரெனக் கருதுகிறீர்கள்.?**

பதில் : எல்லாப் பத்திரிகை ஆசிரியர்களும் எனது நண்பர்கள் நன்றாகவே எழுதுகிறார்கள் ஆனாலும் பத்திரிகைத் துறையில் மிகப் பெரும் ஜாம்பவானாக திகழ்ந்தவர் எனது பெருமதிப்புக்குரிய காலம் சென்ற எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் அவர் கையில் வளர்ந்தவர்கள். எவருமே எழுத்துத் துறையில் சோடை போகவல்லை அவர் தனி மனிதனல்ல பேரியக்கம் என்றே கூறலாம். அடுத்தவர் பேராசிரியர் கைலாசபதி தினகரனில் அவர் ஆசிரியராக இருந்த பொழுது தினமும் மதிய வேளைகளில்

**நெய்தல் நம்பி**

உலகத்தை எனக்கு காண்பித்து விடுவார். மனதில் எத்தனையோ எண்ணங்கள் , கற்பனைகள் துள்ளிப்பாயும் , மேற்படி இருவரும் சிறுகதைத் துறையில் மட்டுமல்ல மற்றும் இலக்கிய விமர்சனம் கலை விமர்சனம், புத்தக விமர்சனம் போன்ற துறைகளில் என்னை ஈடுபடுத்தியவர்கள். என்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

**கேள்வி : இன்றைய உங்கள் இலக்கிய வாழ்வு எப்படியிருக்கிறது?**

பதில் : எனது ஆக்கங்கள் இதுவரை எட்டு நூல்களில் வெளியாகியுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை இரண்டாம் பதிப்புக்களையும் கண்டவை. இவை இலக்கியத்தின் பல்வேறு வகையைச் சார்ந்தவை. இந்நூல்களில் சிறுகதை, நாவல், இலக்கிய நோக்கு பக்தி இலக்கியம் போன்றவை வெகுவாக இலக்கிய விமர்சகர்களால் பாராட்டப் பெற்றிருக்கின்றன. அண்மையில் நான் வெளியிட்டுள்ளன. ஈழத்தமிழர்க்கு ஏன் இந்த வேட்கை? என்ற நூல் தமிழர்களின் உரிமைக்கான போராட்ட வரலாற்றை எடுத்துக் கூறுகின்றது. இதை நான் எழுத வேண்டிய நோக்கம் என்னவாக இருந்ததென்று ஈழத்தமிழ் இலக்கியத்தின் பிரச்சினைகள் பற்றி ஆராய்கின்ற எழுத்துக்களை ஆங்கிலத்தில் பலர் எழுதியுள்ளனர். ஆனால் தமிழிலோ உதிரிகளாக அவ்வப்போது பத்திரிகைகளில் கட்டுரைகளாக மட்டுமே வெளிவந்துள்ளன. புத்திஜீவிகள் மட்டத்தில் மட்டுமே சலசலப் பட்டுக்கொண்டிருந்த இந்தப் பிரச்சினை சாதாரண தமிழ் வாசகர்களும் குறிப்பாக இளைய தலைமுறையைச் சேர்ந்த மாணவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இதனை எழுதினேன் அன்று தொடக்கம் இன்று வரை யுள்ள தமிழ் இனத்திற்கெதிரான ஒடுக்கு முறை சூழ்ச்சி கரமான உரிமைப் பறிப்புக்கான முயற்சிகள் , கட்டவிழ்த்து விடப்பட்ட அட்டகாசகங்கள், அநிதிகளை இந் நூலில் ஆவணப்படுத்தி யுள்ளதுடன் சில அபிப்பிராயங்களையும் முன்வைத்திருக்கிறேன்.

4ஆம் பக்கத் தொடர்ச்சி...

## வவுனியா மாவட்ட தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் 2003

| நிகழ்ச்சி | நிலை | பெயர் | பாடசாலை |
|---|---|---|---|
| பிரிவு 05 | | | |
| நடனம் தனி | 1 | செ.சகிலா | வ/இறம்பைக்குளம் ம.வி |
| வீணை | 1 | தி.சோபனா | வ/இறம்பைக்குளம் ம.வி |
| வயலின் | 1 | த.சிவவதனி | வ/இறம்பைக்குளம் ம.வி |
| திறந்த போட்டி | | | |
| வில்லுப்பாட்டு | 1 | | வ/விபுலானந்த ம.வி |
| | 2 | | வ/நொச்சி மோட்டை அ.த.க.பா |
| விவாதம் | 1 | | வ/தமிழ் ம.ம.வி |
| | 2 | | வ/நெடுங்கேணி ம.வி |
| தமிழறிவு வினா விடை | 1 | | வ/தமிழ் ம.ம.வி |
| | 2 | | வ/புதுக்குளம் ம.வி |
| முஸ்லிம் நிகழ்ச்சி | 1 | | ஐ.றஸீனா வ/அல்இக்பால் மு.வி |
| இசை நாடகம் | 1 | | வ/விபுலானந்த ம.வி |
| | 2 | | வ/சின்னடம்பன் பாரதி .வி |
| நாட்டுக் கூத்து (சிந்து நடை) | 1 | | வ/பூந்தோட்டம் அ.த.க.பா |
| நாட்டுக்கூத்து (வடமோடி) | 1 | | வ/இறம்பைக்குளம் ம.ம.வி |
| நாடகம் | 1 | | வ/சைவப்பிரகாச ம.வி |
| | 2 | | வ/விக்னேஸ்வரா வித் |
| நாட்டிய நாடகம் | 1 | | வ/சைவப்பிரகாச ம.வி |



அரிவையர் அரங்கம்

# திருமண உறவு பற்றி

காலகாலத்தில் கல்யாணம் செய்து வைத்துவிட வேண்டும் பெண்ணை கரை சேர்த்துவிட வேண்டும். "என்றெல்லாம் பெற்றோர்கள் அங்கும் இங்கு மாக தரகரைப் பிடிக்கின்றார்கள். சாதகப் பொருத்தம் பார்த்து கடன்பட்டோ, உள்ளதெல்லாம் கொடுத்து எப்பாடுபட்டும் தம்பிள்ளைகளுக்கு நூறு பேர் மெச்ச கல்யாணம் செய்து வைப்பது இந்நாட்டுப் பெற் றோரின் கடமையாக இருந்து வருகிறது. கல்யாணம் முடிந்து விட்டது எமது கவலையும் தீர்ந்து விட்டது. பொறுப்பு பூர்த்தியாகி விட்டது என்று இன்ராயினும் நிம்மதியாகவும் இருக்க முடியுமா? என்றால் அதுதான் இல்லை. அந்தப் பாக்கியம் இருக்க முடியுமா என்றால் அதுதான் இல்லை. அந்த பாக்கியம் ஒரு சிலருக்கே கிடைக்கின்றது. ஏனையோர் தங்கள் குழந்தைகளின் மண வாழ்க்கை சந்தோசமாக இல்லையே? என்று தீராத கவலையினால் வேதனைப்பட்டு நோயுற்று தம் கடைசிக் காலத்தை துயரத்தோடு கழிக்க வேண்டிய நிலையில் இருப்பது ஒன்றும் புதிதல்ல.

"பிள்ளைகளின் இன்பமே நமது இன்பம்" என்று வாழும் பல பெற்றோர்களுக்கு தம்பிள்ளைகளின் மனவாழ்க்கை முறிந்து விட்டது என்பதை கூறும் போது தங்களது மனவேதனையில் சலிப்பு ஏற்படுகின்றன. அன்று "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்று கணவனின் கொடுமைகளைச் சகித்துக் கொண்டு வாழ்நாள் முழுவதும் கண்ணீரோடு வாழ்ந்து மடிந்த பெண்கள் ஏராளம். தங்களின் துயரம் பெற்றோருக்கு தெரியக் கூடாது என்று தம் துன்பங்களை மூடி மறைத்து அவர்கள் நால்வரிடம் நாங்கள் சந்தோசமாக இருக்கின்றோம். என்று புழுகி மனதுக்குள் வேதனைத்தீயில் வெந்து மடிந்தவர்கள் அப்போது இருந்திருக்கிறார்கள்.

இப்போதும் இருக்கிறார்கள். ஆனால் இன்றைய புதுமைப் பெண் அநீதியைக் கண்டு வெகுண்டெழுந்து தம் உரிமையை நிலைநாட்டி சுதந்திர மாக வாழ்வதற்கு நீதி கேட்கிறார். "பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு" அந்த எல்லையைத் தாண்டிவிட்ட ஒரு பெண் கணவனுக்கு ஒத்தடிமையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே அவள் விவாகரத்து கோரி நீதிமன்றம் போனால் அது குற்றமா?

குடும்பத் தலைவன் ஆண் பெண் அவனுக்கு அடிமை அவனின் குணமறிந்து நடக்க வேண்டும் குடும்பச் சுமையை அவளே தனியாக அடிக்க வேண்டும். கணவன் என்ன செய்தாலும் எப்படி நடந்தாலும் மனைவி தட்டிக் கேட்கப்படாது கணவன் உண்டபின் மனைவி உண்ண வேண்டும். அவன் தூங்கும் வரை அவன் காலை பிடிக்க வேண்டும். இப்படியாக பெரிய பட்டியலிருக்கிறது. இப்படியிருக்க கணவனின் கடமை என்ன. அது பற்றி எழுதி வைத்தவரும் எவரும் இல்லை. இது பெண்களுக்கு இழைக்கப் பட்ட பெரும் அநீதி என்றே கூறலாம். திருமணங்கள் முறி வதற்கு ஆண்வர்க்கமே காரண கர்த்தாவாக இருந்து வருகின்றது. பல குடும்பங்களில் மனைவிக்கு சம அந்தஸ்து கொடுக்கப்படு வதில்லை. உனக்கென்ன தெரியும் நீ வாயை மூடிக்கொண் டிரும் என்று வைபோசாகச் சொல்லுவார்கள். எந்த விடயத் திலும் கணவனின் தீர்ப்பே முடிவானது நான் சொல்லுகின் றோன் நீ செய் என்ற மன நிலையே புரிந்துணர்வு என்றே இல்லை. ஒரு அன்பான பணிவான வார்த்தை இல்லை. வேலை செய்து களைத்து வீடுவரும் கணவனை உபசரிக்க வேண் டும். அவன் களைப்பைப் போக்க மனைவி என்ன செய்ய வேண்டும். அவனை மகிழ்விக்க மனைவி எப்படி நடந்துகொள்ள வேண்டும். என்றெல்லாம் பக்கம் பக்கமாக புத்தகங்கள் எழுதித் தள்ளுகிறார்கள்.

மேடை போட்டுப் பேசுகின்றனர். பெண்கள் முன்னேற்றத்திற்கு இப்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்ய வேண்டும். என்று முழங்குவார்கள். ஆனால் வீட்டில் உழைத்து களைத்து வீடு திரும்பும் மனைவி, நேராக சமையலறைக்குள் புகுந்து கொள்ள வேண்டும். இரவுச் சாப்பாட்டை தயாரித்தல் முதற் கொண்டு பிள்ளைகளின் பரா மரிப்பு, அவர்களின் படிப்பு வேறு பிரச்சினைகள் உணவு கொடுத்துப் படுக்கைக்கு அனுப் புதல் கணவனின் தேவைகளை கவனித்தல் வீட்டில் பெரியவர்கள் இருந்தால் அவர்களையும் பராமரித்து வீட்டில் இருக்கும் செல்லப் பிராணிகளுக்கும் உணவு கொடுத்து சன்னல் கதவுகளை மூடித்தாழ்ப்பாழ் போட்டு "அப்பாடா" என்று படுக்கையில் விழும் போது அதுவரை வு.ஏ பார்த்துக் கொண்டிருந்து விட்டு வரும் கணவன் கொஞ்சமேனும் பச்சா தாபமின்றி தன் உரிமையை நிலைநாட்ட முயலும் போது அந்தப் பெண்ணின் மனும் உடலும் எத்தகைய பாதிப்புக் குள்ளாகும். என்பதை ஏன் சிந்தித்து பார்க்க முடியாது?

இல்லத்தரசி இப்படி இருக்க வேண்டும் அப்படி நடந்து கொள்ள வேண்டும். என்றெல் லாம் பேசும் சமுதாயம் பெண் ணாகப் பிறந்தவளின் இந்த அவல நிலையைச் சந்தித்துப் பாத்து இந்த அநீதிக்கு தீர்வு காணமுயல வேண்டும்.



புருஷனுடன் வாழ முடியாமல் மனைவி மார்கள் பெற்றோர் வீடு திரும்பி விடுகின்றனர். அல்லது பிரிந்து போய் வாழ்க்கை நடத்துகின்றனர். தற்கொலையை நாடுகின்றனர். மனநோயாளி யாகி வைத்தியம் என்று முத் திரை குத்தப்டுகின்றனர்.

தீராத நோயினால் அவஸ்தைப் படுகின்றனர் ஏன் இந்த அவலம்? காதலித்து திருமணம் செய்கின் றவர்களாவது சந்தோசமாக இருக்கின்றார்களா அதுவும் இல்லை ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்ற ரீதியில் வாழ்க்கை போகிறது. இனி விவாகத்தை நாடினாலும் அதையும் சமூகம் விஷக்கண் கொண்டு தானே பார்க்கிறது? நடத்தை கெட்டவள் என்று கூட கூசாமல் சொல்கிறது.

சமூகத்தையோ அதில் வாழும் மனிதர்களின் மனோபாவத் தையோ. மாற்றுவது என்பது இயலாத காரியம் ஆனால் பெண்கள் விழித்தெழ முடியும். பெற்றோர்கள் எப்படியோ மக்கள் கரை சேர்ந்து விட்டால் போதும் என்று பிள்ளையைக் கொண்டு போய் பாழுங் கிணற் றில் தள்ளிவிடாது நன்றாக யோசித்து. தெரிவு செய்யும் மணாளனின் உத்தியோகத் தையோ வருவாயையோ குடும்ப கௌரவத்தையோ பெரிதாக நினைக்காமல் அவனின் குணத்தை அவனைச் சார்ந்தவர் களின் குணாதிசயங்களை மிக அக்கறையுடன் விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும்.

காதலிப்பவர்கள் குறிப்பாக பெண்கள் மிக மிக எச்சரிக்கை யாக நடந்துக்கொள்ள வேண்டும் கண்டதும் காதல் என்று போய் கண்மூடித்தனமாக விழுந்து விடக்கூடாது. திருமண பந்தம் என்பது புனிதமான ஒன்று கேவலம் உடற்சுகத்துக்காகவோ, வம்ச விருத்திக்காகவோ, ஏற்ப டுத்திக் கொள்ளும் ஒரு பந்தமல்ல இரு உள்ளங்கள் ஒன்றுபட்டு அன்பினால் பிணைந்த ஈருடல் ஓர் உயிர் என்று வாழ்வதே இல்லற தர்மமாகிறது.

இதை உணர்ந்து இதன்படி நடந்து கொண்டால் திருமணங் கள் எப்போதுமே முறிந்து விடுவதில்லை. விவாகரத்துக் களுக்கும் இடமில்லாமல் போய் விடுகிறதல்லவா?

**மரீனா, மன்னார்**

# மத்திய கிழக்கில் பெண்ணியம்

பெண்களைப் பற்றியும் பெண்ணியம் பற்றியும் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆசிய மற்றும் மேலைத்தேய நாடுகளின் பெண் எழுத்தாளர்கள் பலர் தமது சூழ்நிலைகள், சமுதாய ஒழுங்குமுறைகள் என்பவற்றை அடிப்படையாக வைத்து பெண்ணியம் தொடர்பான தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இவற்றைவிட மத்திய கிழக்கைச் சேர்ந்த பெண்கள் சிலர் தமது சுதந்திரத்திற்காக குரல் கொடுக்கின்றனர். தமது நிலைமைகளையும் நிலைப்பாடுகளையும் எழுதுகின்றனர். பிரச்சினைகளைப் பேச முன்வருகின்றனர். இவ்வாறான அவர்களுள் ஒருவரான அஸிஸா அல்- ஹிப்ரி என்ற லெபனான் நாட்டு பெண் எழுத்தாளரும் ஒருவராவார். தனது மாக்சிசமும் பெண்ணுரிமையும் என்ற புத்தகத்தில் உலகின் பல பாகங்களிலும் வாழும் பெண்களின் அனுபவங்களையும் கருத்துக்களையும் தேடி அறிந்து எழுதியுள்ளார்.

அவர் பென்சில் வேனியா பல்கலைக்கழகத்திலும் பட்டம் பெற்றவர். 'அறிவியல் தர்க்கம்' என்ற நூலையும் அஸீஸா எழுதியுள்ளார். முதலாளித்துவம் என்பது ஆணாதிக்கத்தின் வளர்ந்த நிலை. ஆனால் மாக்சீசம் என்பது பெண்ணியம் அல்ல. இந்த கோட்பாடு தான் அஸிஸாவின் மாக்சிசமும் பெண்ணியமும் என்பதன் கருப் பொருள். பாலஸ்தீனத்தில் சுதந்திரப் போராட்டம் நடக்கிறது. அதில் பெண்களும் பங்கேற்கின்றனர். போராடுகின்றனர். அமிர் என்ற பாலஸ்தீன பெண் தனது அனுபவங்களை எழுத்தாளருடன் பகிர்ந்து கொண்டார்.

அவர் கூறும் போது, ஆண்கள் எனது தோழர்கள். ஆனால் நான் அவர்களுக்குச் சமமானவள் என்பதில் அவர்களுக்கு ஆழமான நம்பிக்கை இல்லை. எமது அரசியல் வளர்ச்சி முன்னேற்றமான திசையில் போகிறது. ஆனால் சமூக வளர்ச்சி அதற்கு சமமாக இல்லை. சமூகத்தின் கால்கள் பின்நோக்கி இழுக்கின்றன. எனக்கு 36 வயது ஆகிறது. பெண்களுக்குரிய மரபுகள் எதையும் உதறித் தள்ளி விட்டு ஓர் ஆணைக்கூட சந்திக்கவில்லை. இந்த சமூகத்தில் அரபுப் பெண் ஒருத்தி வாழ விரும்பினால் அவள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நான் உணர்கிறேன். தனியாக இருக்கும் பெண்கள் சுதந்திரத்தோடு வாழ முடியாது. என் அண்ணன் புரட்சிகரமானவன். ஆனால், அவன் கூட நான் ஒரு அந்நிய ஆணுடன் இணைந்திருப்பதை அனுமதிக்க மாட்டான். அதனை அனுமதிக்கவும் முடியாது என்று அந்தப் பலஸ்தீனப் பெண் கூறியுள்ளார். எழுத்தாளர் அஸிஸாவுடன் லெபனான் பெண் ஒருவர் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட போது எமது நாட்டு சூழலில் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் ஒரு பெண் வாழ விரும்பினால் அவள் திருமணம் செய்து கொள்ளக் கட்டாயப்படுத்தப்படுகிறாள். இந்த விடயங்களில் தலைவர்கள் போலித் தனத்தையே காட்டுகின்றனர். பொதுக் கூட்டங்களில் பெண்களின் விடுதலை பற்றியும் பேசுகிறார்கள்.

ஆனால் ஒரு பெண் அவளுடைய கணவரின் உடைகளை கழுவி அவனுக்கு உணவு சமைக்க வேண்டும். ஆணுக்கு இன்பத்தையும் அமைதியையும் கொடுக்கக் கூடியவளாக ஒரு பெண் இருப்பதையே புரட்சி என்று நினைக்கின்றனர் இங்குள்ள மாக்சிச வாதிகள். பெண் விடுதலை என்பது படிப்படியாக சார்தியப் படுத்திக் கொள்ள வேண்டியதொன்று என அந்த லெபனான் பெண் கூறியிருக்கிறார்.

பாகிமா என்ற இன்னுமொரு பாலஸ்தீன பெண் பேசும்போது தனது கருத்துக்களை சற்று ஆழமாகவே கூறினார். பாலஸ்தீனத்திலும் வெபனானிலுமுள்ள பெண்களின் பிரச்சினைகளுக்கு போர் ஒரு முக்கியமான காரணி. லெபனானின் மாக்சிச அமைப்புக்கள் உதடளவிலேயே பெண்ணியம் பேசுகின்றன. பாலஸ்தீன பேரிழப்புக்களை பெண்கள் ஈடுசெய்ய வேண்டும் என்று ஆண்கள் நினைக்கிறார்கள். சந்ததியை வளர்ப்பதென்பது பெண்களின் தேசிய கடமை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. அனைத்துக் குழந்தைகளும் சம்பந்தப்பட்ட பெண்களின் விருப்பத்துடனா பிறந்தன என்பதில் தெளிவில்லை எனக் கூறுகிறார்.

மத்திய கிழக்கில் பெண் விடுதலை என்பது மிகவும் சிக்கலான ஒன்று. அது படிப்படியாக நடந்தேற வேண்டிய ஒரு விடயம் என்று எழுத்தாளர் அஸீஸா தனது நூலில் கூறியிருக்கிறார்.

## விளையாட்டுத் தகவல்கள்

# சதுரங்க ஆட்டத்தில் இந்தியாவின் சாமர்த்தியம்

-காயத்திரி-

பன்றிகளால் பறக்க முடியாது. உலகக் கிண்ண உதைப்பந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டிகளில் இந்திய அணி கலந்து கொள்ள முடியாது. மூலப்படிவ மற்ற படங்களை பொலிவுட் தாயரிக்கும் உறுதியற்ற உலகிலும் கூட சிலவிடயங்களில் உங்களால் உறுதியாக இருக்க முடியும்.
சதுரங்க ஆட்டத்தில் காய்களை நகர்த்தும் சாமர்த்தியம் இந்திய அணிக்கு நிச்சயமாக உண்டு.

கேராளவில் உள்ள கோழிக் கோட்டில் கடந்த ஜூன் மாத ஆரம்பத்தில் நடைபெற்ற ஆசியன் சம்பியன் சிப் சதுரங்க போட்டிகளில் இந்தியா வெற்றி வாகை சூடியதிலிருந்தே சதுரங்க ஆட்டத்தில் (CHESS) இந்தியா ஆதிக்கம் செலுத்த முடியும் என நம்பலாம்.

ஈரத்தன்மையுடைய பருவக்காற்றை கேரளா இருகரம் கூப்பி வரவேற்ற.... வேளை தங்க மழை பெய்திருக்கிறது.
சதுரங்க சுற்றுப் போட்டிகளை நடத்திய இந்தியா ஆறு தங்கப்பதக்கங்களில் ஐந்தைக் கைப்பற்றியது.
இறுதியாக 18 பதக்கங்களில் 13 பதக்கங்களை இந்தியா வென்றெடுத்தது. வியட்நாம் ஒரு தங்கப் பதக்கத்ததையும் வெள்ளிப் பதக்கங்கள் ஐந்தையும் வென்றது.
இறுதியில் எல்லா பதக்கங்களையும் இரு நாடுகளும் பரிமாறிக் கொண்டன. கஸகஸ்தான், ஈரான், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளில் வீரர்கள் இருந்தும் இந்தியச் சிறுவர்கள் சதுரங்க ஆட்டம் ஆகிய போட்டிகளை தங்கள் தேசிய வெற்றியாகவே ஆக்கிக் கொள்வார்கள்.

இறுதியாக தெஃகிரானில் நடைபெற்ற ஆசியன் சம்பியன் சிப் போட்டிகளில் 10 பதக்கங்களை ஐந்து தங்கப் பதக்கங்கள் அடங்க வெற்றி கொண்டார்கள். 2001ம் ஆண்டு பிக்கானறில் (BIKANER) நடைபெற்ற போட்டியில் இந்திய அணி 11 பதக்கங்களை 4 தங்கப்பதக்களுடன் வென்றெடுத்தது. 1999ம் ஆண்டு 18 பதக்கங்களில் 14 பதக்கங்களைக் கைப்பற்றியது.

கோழிக்கோட்டில் சிறுவர் சிறுமியர்களுக்கான பிரத்தியேக போட்டிகளும் நடைபெற்றன.



இப்போட்டிகள் மூன்று வயதெல்லைக் .கூறுகளாக நடைபெற்றன. 14வயதுக்குட்பட்டவர்கள், 12 வயதுக்குட்பட்டவர்கள், 10 வயதுக்குட்பட்டவர்களென இவை தனித் தனித் கூறுகளாக நடைபெற்றன.

இப்போட்டிகள் மிகத் திறமையான முறையில் நடைபெற்றன. 14 வயதுக்குட்பட்டவர்களின் நிகழ்வில் எதிர்பாராத வெற்றியை இந்திய அணி பெற்றுக் கொண்டது.

ஜே. ராஜசூரிய ஆசியாவின் ஜூனியர் சம்பியனாகவும், தீபன் சக்கரவர்த்தியின் சகோதரி எல்லோரையும் வியப்பிலாழ்த்தியதுடன் தொடர்ந்து நடைபெற்ற ஆட்டங்களில் ஆபார திறமையைக் காட்டினார்.

இந்த மதுரைச் சிறுமி ஏனைய போட்டியாளர்களைவிட முன்னணியில் திகழ்ந்ததோடு ஏழாவது சுற்றிலும் இறுதிச் சுற்றிலும் முழுமையான திறமையை வெளிப்படுத்தி அவரது வாழ்நாளிற் காணாத பெரும் வெற்றியை ஈட்டினார். இறுதிச் சுற்றில் என்.ராகவியிடமிருந்து இந்த வெற்றியை பெற்றுக் கொண்டாள்.

ராஜசூரிய 5.5புள்ளிகளை பெற்றுக் கொண்டார். ஒரு ஆட்டத்திலாவது இவர் தோல்வியைத் தழுவவில்லை யென்பது குறிப்பித்தக்கது. ஒருசில சுற்றுக்களில் சிறிது தளர்வை எதிர்கொண்டாலும் கூட! ராஜசூரிய தனது அபாரமான ஆரம்ப ஆட்டத்திலேயே அவரது ஒன்றுவிட்ட சகோதரியான ராஜதர்சனியை 6வது சுற்றில் வெற்றி கண்டார்.

இந்த வெற்றி தனக்கு அதிகளவு நம்பிக்கையை தந்ததாக இவர் தனது வெற்றியை மீள நினைவு கூர்ந்தார்.

அடுத்த மூன்று சுற்றுக்களிலும் இவர் மேலும் மூன்று சிறுமிகளை வெற்றி கொண்டார். கிரான் மொனிஷா மெகான்டி, பல்லவி மாயா மற்றும் வியட்நாமைச் சேர்ந்த லோங் றிஹாட்லின் ஆகியோரே இவர் வெற்றி கொண்ட போட்டியாளர்களாவர். இந்தப் போட்டியில் வியட்நாம் சிறுமி வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

எப்போதுமே முன்னணியில் நிற்கும் ராஜசூரிய இனனுமொரு வியட்நாம் சிறுமியை வெற்றி கொண்டார்.

இவர் இன்னுமொரு சுற்றில் சௌம்யாா சுவாமிநாதனை எதிர் கொண்டு ஆறாவது சுற்றில் தனது அதிஷ்டத்தை தக்க வைத்துக் கொண்டார்.
ஆனால் அவரது நல்ல வாய்ப்புகளுக்காக அவரோடு காழ்ப்புணர்ச்சி எவருக்கும் ஏற்படவில்லை. பரிசளிப்பின் போது கூட ராஜசூரியாவுடன் ஆடி தோல்விகண்ட இரண்டு வியட்நாமிய சிறுமியர்களும் உற்சாகமாகத்தான் காணப்பட்டார்கள். அவர்கள் தலா 5 புள்ளிகளைப் பெற்றாலும் கூட லோங் றிஹாட் வெள்ளிப் பதக்கத்தைக் தட்டிக் கொண்டவராவர். முதல் நாளிலே இவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி இந்தியாவின் மேரி ஆன் கோமஸ் என்பவரின் அபார ஆட்டத்தினாலேயே. ஏற்பட்டது.
மேரி ஆனின் ஆரம்பமே அபாரமான வெளியேற்றத்தோடு முடிவடைந்தது.

சிறுவர்களுக்கான சதுரங்க ஆட்டச் சுற்றுப் போட்டிகளில் நினைவு கூரக் கூடியவர்களில் ஒருவர் ஜி.ரோஜிட்.
சர்வதேச சுற்றுப் போட்டிகளில் முதல் தடவையாக சிறப்புப்பட்டத்தை பெற்றிருந்தாலும் கூட வெள்ளிப் பதக்கத்தையும், வெண்கலப் பதக்கத்தையும் ஏற்கனவே தட்டிக் கொண்டுள்ளார். 14வயதுக்குட்பட்டவர்களின் சுற்றுப் போட்டியில் ஒரு சுற்றுக்கு முன்பே தங்கப்பதக்கத்தைத் தட்டிக் கொண்டார்.

ஹைதராபாத்தில் நடைபெற்ற போட்டிகளில் புள்ளிகளைப் பெற்ற இவர் எவரிடமும் தோல்'வி காணவில்லை. மந்தமான ஆரம்பம் இவருக்கு ஏற்பட்டாலும் முதலில் எழுந்த பிரச்சனை வெற்றி கொண்டு முன்னேறி முதலாம் இரண்டாம் சுற்றுப் போட்டியில் தனது திறமையைக் காட்டினார். எளிதில் காய்களை நகர்த்துவதில் சாமர்த்தியம் காட்டி மீதமிருந்த சுற்றுகளில் தனது திறமையை வெளிப்படுத்தினார்.

---

## திரிசூலியின் பதில்கள்

ராஜேஸ் கொட்டாஞ்சேனை,
*இலங்கையைச் சிங்கப்பூர் ஆக்குவது எப்படி/*
எந்தவகையில் சிங்கப்பூராக்குவது. சுத்தத்திலா? பொருளாதாரத்திலா? இவையாவற்றிற்கும் அநாவசியமான யுத்தத்தை நிறுத்தி இலங்கையர் எல்லோருக்கும் எமது நாடு என்ற உணர்வு வந்தால் நிச்சயமாகச் சிங்கப்பூர் தான்.

சீலா, கலஹா.
*சமாதானத்தில் மக்களின் பங்கு எவ்வாறு அமையவேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்/*
சமாதானத்தில் முழுமையான பங்களிப்பும் மக்களிடமே உண்டு. எமது நாட்டு மக்கள் எல்லோரும் சமாதானமாக வாழவேண்டும் என்ற நோக்கம் ஒவ்வொருவருக்கும் இருந்தால் யாராலும் நாம் சமாதானமாக வாழ்வதனைத் தடுக்க முடியாது.

மரியநாயகம், வவுனியா,
*செந்தணலே உன்னிடம் சூடு படாமல் கற்றுக்கொளள் வேண்டியதைச் சொல்லுவாயா?*
"சூடுபட்ட பூனைதான அடுப்பங்கரையை நாடாது" இதுபட்டறிவு சூடுபட்டு வேகவேண்டியது தீமைகளே. நல்ல உள்ளங்கள் தணலில் வேகாது, சுடரும்.

ரம்மியா, வாழைச்சேனை
*வாழ்க்கையில் திடரென முன்னேறுவதற்கு என்ன வழி?*
வாழ்க்கையில் முன்னேறுவதற்கு நேர்மையான விடா முயற்சியே வழி. ஆனால் திடீரென முன்னேறுவதற்கு எல்லாமே வழிதான். அது சொல்லித் தெரிவதல்ல.

புளோரன்ஸ், ஆமர்வீதி.
*காதல் திருமணம் ருஷியானதா/ நிச்சயிக்கப்பட்ட திருமணம் ருஷியானதா?*
திருமணமே ருஷியானது தான். எல்லாமே அளவோடு இருந்தால் ருஷிப்பதும், திகட்டுவதும் தம்பதிகள் கையில்.

பேட்ஷன், வாழைச்சேனை,
*வாழ்க்கையில் ஏற்படும் விரக்தியினால் தற்கொலைசெய்ய வரும் முடிவு சரிதானா?*
ஐந்தும் + ஐந்தும் மூன்று இது எவ்வாறு பெருந்தவறோ அதைவிடத் தவறு தற்கொலை முடிவு எதையும் எதிர்கொள்ளும் மனப்பலம் வேண்டும் அதுதான் மனிதனுக்கு அழகு.

உங்கள் கேள்விகள் வர வேண்டிய முகவரி

திரிசூலியின் பதில்கள்
செந்தணல்
இல 61 கற்குழி,
வவுனியா

# செந்தணல்

SENTHANAL
61, கற்குழி வீதி,
வவுனியா.
தொலைபேசி : 024 23891
: 074 589368

## நீங்களும் எழுதலாம்!

**சித்திரமும் சிறுகதையும்**

இப்படத்திற்குப் பொருத்தமான கதையை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். தரமான சிறுகதை பிரசுரிக்கப்படும்.



## செந்தணல் வெளியீட்டு விழாக் காட்சிகள்





12.07.2003 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வவுனியா நகரசபை மண்டபத்தில் கோலாகலமாக ஆரம்பமாகியது.




சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக் குருக்கள், மௌலவி சமட், தமிழ்மணி அகளங்கன், பேராசிரியர் சிவலிங்கராஜா, கலாநிதி குணராசா, சைவப்புலவர் செல்லத்துரை, திரு பொன் கணேசமூர்த்தி, சிவநெறிப் புரவலர் சீ. ஏ. இராமசுவாமி, திரு கனகர்வி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.




மூதறிஞர் முல்லைமணி வே. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் ஆரம்பமான விழாவில் நாதஸ்வரக்கலைஞர் அளவையூர் சுதந்திரன் குழுவினரின் மங்கள இசை முதலில் இசைக்கப் பெற்று விழாப் பொலிவு பெற்றது.



முதற் பிரதியினை சைவப்புலவர் செ. குணபாலசிங்கம் அவர்கள் வழங்க சிவநெறிப்புரவலர் திரு சீ. ஏ. இராமசுவாமி அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.



விழாவில் செந்தணல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செல்வி வாணிஜெயா அவர்கள் பாராட்டுப் பெற்றார்.




நிகழ்வின் சிறப்பு நிகழ்ச்சியாக இசைமாமணி எஸ் கருணாகரன் அவர்களின் இசைநிகழ்ச்சி இடம்பெற்றது

இப்பத்திரிகை இல. 61, கற்குழி வீதி, வவுனியாவில் அமைந்துள்ள சூரியன் வெளியீட்டகத்தினருக்காக இல 315, ஜம்பெட்டா வீதி, கொழும்பு 13 இல் அமைந்துள்ள ஈ குவாலிட்டி கிரபிக்ஸில் அச்சிடப்பட்டு 26 - 07 - 2003 அன்று வெளியிடப்பட்டது.